உ

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 5 | சித்தார்த்தி வருடம் மார்கழிமீ கஉ | 1919வருடம் டிசம்பர் மீ 16உ | பகுதி 6

கடவுள் வணக்கம்.

வானாதி பூதமா யகிலாண்ட கோடியாய்
மலையாகி வளைகட லுமாய்
மதியாகி யிரவியாய் மற்றுள வெல்லாமாகி
வான்கருணை வெள்ள மாகி
நானாகி நின்றவனு நீயாகி நின்றிடவு
நானென்ப தற்றி டாதே
நானு னெனக்குளறி நானுவி காரியாய்
நானறிந் தறியா மையாய்ப்
போனா லதிட்டவலி வெல்லவெளி தோபகற்
பொழுதுபுகு முன்கண் மூடிப்
பொய்த்துயில் கொள்வான்றனை யெழுப்பவச மோவினிப்
போதிப்ப தெந்த நெறியை
ஆனாலு மென்கொடுமை யனியாய மனியாய
மார்பா லெடுத்து மொழிவேன்
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மான பரமே.

கள்ளம் பொருந்து மடநெஞ்ச மேகொடுங் காலர்வந்தா
லுள்ளன் பவர்கட்குண் டோவில்லை யேயுல கீன்றவன்னை
வள்ளம் பொருந்து மலரடி காணமன் றூமின்ப
வெள்ளச்செம் பாதப் புணையேயல் லாற்கதி வேறிலையே.

ஒளியே யொளியி னுணர்வே யுணர்வி னுவகைபொங்குங்
களியே களிக்குங் கருத்தே கருத்தைக் கவளங்கொண்ட
வெளியே வெளியின் விளைசுக மேசுகர் வீறுகண்டுந்
தெளியேன் றெளிந்தவ ரைப்போற்றி டேனென்ன செய்குவனே.

ஆனந்தபோதினி

சித்தார்த்தி௵ மார்கழி௴ ௧௨

மானிட ஜன்மம்

(166-வது பக்கத் தொடர்ச்சி.)

இந்த ஒரு இச்சையை யவன் தணித்துக்கொள்ள முயல்வதால் அவனுக்குண்டாகும் கஷ்டங்கள் அதோடு நீங்கியபாடில்லை. தனக்குண்டாகும் சந்ததிகளையும் தன் மனைவியையும் போஷிக்கவேண்டியதற்காகவும், புத்திரர் புத்திரிகளுக்குச் செய்யவேண்டுவனவற்றைச் செய்வதற்காகவும் வேண்டிய பொருளைச் சம்பாதிப்பதிலும், அவர்களுக்கு வியாதி முதலிய நேரிடின் இவனடையும் வியாகூலம், மனக்கலக்கம், கவலை யிவற்றை யனுபவிப்பதிலும் இவன்படும் கஷ்டம் அம்மம்ம ! கடவுளுக்கே பிரீதி. இத்தொல்லைகள் மரணபரியந்தம் இவனை விட்டவை யல்ல.

மிருகங்களுக்கு இத்தகைய கஷ்டங்கள் ஒன்றுமே யில்லை. அவைகளும் தங்கள் குட்டிகளைப் பாதுகாத்து வளர்க்கின்றனவெனினும், கொஞ்சகால மட்டுமே அவ்வாறு பாதுகாக்கின்றன. குட்டிகள் தாங்களே தனிமையாய் நடமாடி இரைதேடிக்கொள்ளும் சக்தியை யடைந்ததே அவைகளை விட்டுப் பிரிந்து விடுகின்றன.

7. இனி வயோதிக கால அனுபவம் எப்படி யிருக்கின்றதென நோக்குவோம். மானிடன் கிழப்பருவமடைந்ததே தேக பலமும் மனோபலமும் வரவரக்குன்றி, நடக்கவும் வலி குறைந்து முதலாவது, உதவிக்கு மூன்றாவது ஒருகால் (ஊன்றுகோல்) தேடிக்கொள்கிறான். கண் பார்வை குன்றி இரவில் வெளிச் செல்லத் துணைவேண்டுகிறான். பற்களெல்லாம் விழுந்துபோனமையால் தான் இச்சிக்கும் பண்டங்களை மென்று சுவைத்துண்ணவியலாது ஏங்கித்துக்கிக்கிறான். அக்காலத்தில் ஒரு தொழிலும் செய்யச் சக்தியில்லாததால் அன்னியர் சவரக்ஷணையை யெதிர்பார்க்க வேண்டியதாகிறது. இன்னும் மிக்க வயோதிகமடைந்தால் ஒரு குழவியைப் போல் படுக்கையை விட்டு

எழுந்து செல்லவும் சக்தியின்றிப் பிறர் உதவிசெய்யா விடின் குழந்தையைப் போன்றே படுக்கையிலேயே மலஜல விசர்ச்சனம் செய்து கொள்வான். இன்னும் வியாதியின் வேதனை வேறிருக்கிறது. இவற்றை விரிக்கிற் பெருகும். இப்பருவத்தில் இவன் நிலைமை மிக்க பரிதாபமானது. இதை வாசிப்போரே சற்று சிந்தித்தால் இப்பருவத்தில் மனிதன் அனுபவிக்கும் வேதனை யெத்தகையதென விளங்கி உடனே மனதில் திகில் உண்டாய் விடும்.

மிருகங்களுக்கோ இத்தகைய தொல்லைகளில்லை. கிழப்பருவமாயினும் ஒரு மிருகம் மெதுவாய்ச்சென்று தன் வயிற்றிற்கு இரை தேடிக்கொள்கிறது. மனிதர்கள் போல் மிருகங்கள் பிறந்தது முதல் அடிக்கடி வியாதிகளால் வருந்துவதில்லை.

8. மானிட ஜனனத்தின் துன்பங்கள் இவ்வாறிருக்க, மிருகங்களுக் கில்லாத சில அபூர்வ சக்திகளை நாம் உடைத்தா யிருப்பதாக எண்ணுகிறோம். அவற்றைக்குறித்து மேல்நாட்டுப் பண்டிதர் ஒருவர் கூறுவதை யீண்டு வரைகின்றோம்.

(1) மனிதனுக்கு மட்டுமே பகுத்தறிவு உண்டென்கிறோம்.

மிருகங்களும் தங்களுக்கு வேண்டியவைகளைப் பகுத்தறிந்து கொள்கின்றன. அவைகளுக்கும், தங்களுக்கு இது நலம்தரும், இது தீங்கு விளைவிக்கும், இன்னின்ன பிராணிகள் நமக்கு விரோதிகள், இன்ன புற்பூண்டு நமக்கு வியாதியை யளிக்கும்என்று பகுத்துணரும் சக்தி இருக்கின்றது. மனிதனுக்கேனும் ஒருவர் கற்பித்தாலன்றி ஒரு சக்தியும் உண்டாகாது. மிருகத்திற்கோ ஆண்டவன் கருணையோடு இயற்கையிலேயே அதற்கு அவசியமான சக்திகளை யளித்திருக்கிறார். "கடவுள் ஒருவர் இருக்கிறார், இம்மை மறுமை யுண்டு" என்ற இந்த அறிவு மிருகத்திற்கு இல்லை யென்கிறீர்கள்.

"இருக்கட்டும், மிருகத்திற்கு நம்போல் ஐந்தறிவுகள் மட்டும் உண்டு என்று ஒப்புக்கொள்கிறீர்கள். கடவுள் உண்டென்ற அறிவுமட்டும் மிருகத்திற்கில்லை யென்ற அதன் மனோ உணர்ச்சியை நீங்கள் எப்படி யறிந்து கொண்டீர்கள்? மிருகமும் நம்போல் பூஜை செய்யவில்லை, கோயிலுக்குப் போய் அங்குள்ள விக்கிரகத்தைப் பூஜிப்பதில்லை யென்பதால் கூறுகிறீர்களா? மனிதர்களிலேயே ஞானிகளாகிய துறவிகளில் பெரும்பாலார் கோயில் முதலிய ஒரு விடத்திற்கும் செல்லாமல் ஒரு கிரியையும் செய்யாமல் உன்மத்தர் போலும், பித்தர் பேயர் போலும் இருந்துகொண் டிருக்கக் காண்கிறோமே. மேலும் அவர்கள் வெளிச்செய்கைகளை நோக்கினல்

சற்றும் பகுத்தறிவே யில்லாதவர்கள்போலவே தோன்றுகின்றதே. இதன்றி புராணங்களில் பன்றிக் குட்டிகள், கருங் குருவி, யானை முதலியவைகளெல்லாம் கடவுளைப் பிரார்த்தித்து அருள் பெற்றதாய்க் கூறப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க அவற்றிற்குக் கடவுள் நினைப்பில்லை யென்று நாம் எப்படி நிச்சயமாய்க் கூற லாகும்?" என்று அப்பண்டிதர் கேட்கிறார்.

(2) மிருகங்களுக்கு மனிதனைப்போல் முன்யோசனை, ஒன்றை யொன்று பாதுகாத்தல், தந்திரம் முதலிய குணங்கள் இல்லையென்று பலர் கருதுகிறார்கள். உண்மை யப்படியில்லை. அவற்றில் எவை யெவைகளுக்கு எந்தெந்தக் குணங்கள் வேண்டுமோ அந்தந்தக் குணங்கள் இருக்கவே யிருக்கின்றன. அவைகள் தம் குட்டிகளைப் பாதுகாப்பதில் தங்கள் உயிரை யிலட்சியம் செய்வதில்லை. மைசூர் காட்டில் சில வருடங்களுக்கு முன் யானைகள் கூட்டமாய் நாற்புறங் களிலும் வேலிகட்டி அதற்குள் ஒட்டப்பட்டுப் பிடிக்கப்பட்டபோது ஒரு யானைக்கன்று கும்பலோடு கலந்து கொண்டு உள்ளே சென்று அகப்பட்டுக் கொண்டது. உடனே கதவு மூடப்பட்டது. கன்றைப் பிரிந்து பின்தங்கிய தாய்யானை தன் கன்று உள்ளே அடைக் கப்பட்டதை யறிந்து, தான் தப்பித்துக்கொண்டு போய்விடாமல் கதவண்டை வந்து நின்று கொண்டிருந்தது; கதவுதிறக்கப்பட்ட பின் தானும் உள்சென்று தன் கன்றோடு சேர்ந்து கொண்டது. காட்டில் யானைகள் கூட்டமாய் மேயும்போது, பெண்யானைகள் கன்றுகள் முதலிய வற்றை மத்தியில்விட்டு, வயதுவந்த ஆண் யானை கள் சுற்றிலும் பாதுகாப்பாய் வர, வயது முதிர்ந்த யானைகள் மிருதுவான மண்ணுள்ள பூமியில் சிக்காதபடி சரியானபாதை காட்டிக் கொண்டு முன்னே செல்கின்றன. ஒரு பசு தன்முன் ஒரு சிறுவன் நிற்பதைக்கண்டு, தனக்குப் பத்தடி பின்னால் வரும் தன் சிறுகன்றுக்கு இவன் ஏதேனும் தீங்கு செய்வானெனக்கருதி, தன் கொம்பின் முனை யவன் மேல் படாமலே பக்குவமாய்க் கொம்பினாலேயே அவனைப் பக்கத்திலுள்ள சாலகத்தில் தள்ளிவிட்டுத் தன் கன்று அந்த விடத்தைத் தாண்டிவரும் மட்டும் அதைத் திரும்பிப்பார்த்த படியே சென்றதை யொருமுறை கண்டோம். அதன் செய்கைகளால் அதன் கருத்து நன்கு விளங்குகிறது. இவ்வாறு பல திருட்டாந் தங்களுண்டு.

மனிதன் வசிக்க வீடு கட்டிக்கொள்கிறா னென்றால், சீதோஷ்ணங்களின் கொடுமைக்குத் தப்பித்துக்கொள்ள வேண்டிய அவசிய முடைய மிருகங்களும் பட்சிகளும்கூட அவ்வசதியைத் தேடிக் கொள்கின்றன. மனிதனுக்குப் பயன்படும் மிருகமாதிகளுக்கு அவனே அவ்வசதியை யுண்டாக்கி யளிக்கிறான். காட்டிலுள்ள மிருகங்கள், குகைகள் கற்சந்துகள் மரத்தடிகள் முதலிய அவை

யவைகட்குத் தக்க வாசஸ்தலங்களைத் தேடிக்கொள்கின்றன. ஜலத்தில் வசிக்கும் நீர்நாய், ஜலத்தின் கீழிருந்தே கரையில் வளைதோண்டி அங்கு ஜலமட்டத்திற்கு மேலான விடத்தில் சேற்றினாலும் கழிகளாலும் வீடு கட்டிக்கொண்டு தன் குட்டிகளோடு அங்கு வசிக்கிறது. கைதேர்ந்த ஒரு சிற்பசாஸ்திரிகூட அத்தகைய கட்டிடத்தைக் கட்டமாட்டான். அத்தகைய வியப்பை யுண்டாக்கத் தக்க விதமாய் அது அந்த வாசஸ்தலத்தைக் கட்டுகிறது. தூக்கணான் குருவியின் கூண்டைப்போல் அறிவுடையவனாகிய மனிதன் செய்ய முடியுமா?

(3) மிருகத்திற்குப் பேசத் தெரியாதென்கிறோம். சீனக்காரர் பேசுவதைக் கேட்கும்போது உண்மையில் நமக்குப் பலவிதச் சத்தங்கள் மட்டும் புலப்படுகின்றனவே யன்றி வேறொன்றும் விளங்குவதில்லை. அவர்கள் நம்போன்ற மனிதர்களானதாலும், அவர்கள் பாஷையை இன்னொருவர் கற்றுக்கொள்ளக் கூடுமாதலாலும், அவர்கள் பேசுகிறார்கள் என்று தெரிந்து கொள்ளுகிறோம். சில ஜாதியார் எழுதும் எழுத்தில்லாமல் வாயால்மட்டும் பேசிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் வெளியிடுவது பலவித சத்தங்களே யன்றி வேறில்லை. அப்படியிருக்க மிருகங்கள் தங்களுக்குள் பேசிக்கொள்வதில்லை யென்று நாம் எப்படி நிச்சயித்து விடலாம். அதற்குமாறாக சில ஜந்துக்களின் நடவடிக்கைகளைக் கவனித்துப் பார்த்தால் அவைகள் சத்தத்தாலோ, சமிக்கையாலோ ஒன்றுக்கொன்று தங்கள் எண்ணங்களை வெளியிட்டுக் கொள்கின்றன வென்று நன்கு புலப்படுகிறது. ஒரு எறும்பு ஒருவிடத்தில் அதிகமான உணவுப்பொருளைக் கண்டால் உடனே திரும்பிச்செல்கிறது. சற்று நேரத்திற்குள் ஏராளமான எறும்புக்கூட்டங்கள் அங்குவந்து சேரக்காணலாம். இப்படிப் பலதிருட்டாந்தங்கள் உண்டு.

இன்னும் இறந்தபிறகும் மிருகங்களின் சர்மம், உரோமம், கொம்பு, எலும்பு முதலியவைகள் மானிடர்க்கு உபயோகமாகின்றன. சில மிருகங்களின் தேகத்திலிருந்து அரிய ஔடதங்களும், வாசனைத்திரவியங்களும் உற்பத்தியாகின்றன. மனிதன் தேகமோ ஒன்றுக்கும் பயனற்றது.

இதைப்பற்றி நாம் இவ்வளவு விரிவாய் எழுதநேர்ந்ததற்குக் காரணம், ஒரு விஷயத்தைமட்டும் கருதி நமது ஜன்மம் யாவற்றினும் உயர்வானதென மதித்து மகிழ்வடைவதோ டிருந்து விடாமல், இந்த ஜன்மத்திலுள்ள துன்பங்களை யுணர்ந்து சிந்தித்து இதில் விரக்தியடைந்து, 'இம்மலபாண்டத்தைச் சுமக்கும் கர்மம் என்று ஒழியுமோ கடவுளே' யென்று ஈசுவரனைப் பக்தியோடு பிரார்த்தித்து இப்பிறவிக்கடலினின்று முத்தியாங் கரைசேரும் மார்க்கத்தைத் தேடவேண்டுமென்று நினைப்பூட்டுதற்பொருட்டே யாகும்.

ஞான அப்பியாசிகள் இத்தேகத்தில் இருக்கும்போதே, இதற்கும் நமக்கும் ஒரு சம்பந்தமுமில்லையென்றுணர்ந்து இதை வெறுத்து "நமக்குத் தேகம் இருக்கிறது. இது நம்தேகம்" என்பதையேயடியோடு மறக்க முயல்வதும், 'இத்தேகத்தோடிருப்பது அருவருப்பே' யென்று ஆன்றோர் அருளியுள்ளதும் தக்க அத்தாட்சிகளாகும். இவ்வாறு தேகத்தை மறக்கும் கருத்து நோக்கியே நம் தாயுமானவர் "சகமீதிருந்தாலும் மரணமுண் டென்பதைச் சதாநிஷ்டர் நினைவதில்லை..." என்று திருவாய் மலர்ந்தருளினர்.

ஓம் தத் சத்

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்"

மேற்கண்ட ஆன்றோர் வாக்கியத்தை நாம் சாதாரணமாய் வாசிப்பதோடு விட்டு விடுகிறோமே. உண்மையில் மனப்பூர்வமாய்க் கடவுளிடம் பூரண நம்பிக்கைவைத்து நடப்போர் அரிதினும் அரிதே. அவ்வாறு நாம் நம்பும்பட்சத்தில் ஆண்டவன் நமக்கு உதவிசெய்வாரேயன்றி நம்மைக் கைவிடமாட்டார் என்பது சத்தியம். இதற்குத் திருட்டாந்தமாய்த் திருவிளையாடற் புராணத்துள்ள ஒருவிஷயத்தை ஈண்டுச் சுருக்கமாகக் கூறுவாம்:—

மதுரைமாநகரில் வணிகர்குலத்துதித்துக் குபேரனுக்குச்சமதையான பெருஞ் செல்வத்தையுடைய தனபதி செட்டியும் அழகில் மிகுந்தவளும் அருந்ததிக்கொத்த கற்புவாய்ந்தவளுமான சுசீலையென்னும் அவன் மனைவியும் நெடுநாள் புத்திரனில்லாமல் வருந்தியபின், தனபதியென்பவர் தம் தங்கைபிள்ளையையே தமக்குப் புத்திரனாகக்கொண்டு அந்தப் பிள்ளைக்குச் சகல ஆபரணங்களையு மணிந்து அன்புடன் வளர்த்து வருங்கால், தனபதி தம் மனைவி நிமித்தம் தம் தங்கையுடன் விரோதித்து சண்டையிட்டுக் கொண்டு வருநாளில் ஓர்நாள் தங்கை தமயனைப் பார்த்து பிள்ளையற்றபாவியான நீ என் மகனாலல்லவோ, இம்மையிலும் மறுமையிலும் நற்பயனடைய யோக்கியனானு" யெனச் சினந்து கூறக்கேட்ட தனபதி மிக்க வருத்தமும் நாணமுங்கொண்டு, வரும் பிறப்பிலாயினும் மைந்தனுண்டாகத் தவஞ் செய்யவேண்டுமென்று, தம் செல்வமெல்லாம் தம் மருமகனுக்கே கொடுத்துவிட்டுக் காட்டில் தவஞ்செய்யச் சென்றான்.

தவத்திற்குச் சென்ற தனபதி நெடுநாள் திரும்பிவராததைக் கண்ட அவர் தாயாதிகள் தனபதி மருமகன் கொண்ட செல்வமெல்லாவற்றையும் வழக்கிட்டுப் பறித்துக் கொண்டனர். எல்லாத் திரவியங்களையுமிழந்து வருந்துகின்ற தாயும் மகனும் ஸ்ரீ மீனாக்ஷியம்பாள் சமேத சுந்தரேசப்பெருமானது திருவடிகளைத் தொழுது "யாவர்க்கும் மாதா, பிதா, குரு, தெய்வமாகிய கடவுளே! நாங்கள் தங்களையே தஞ்சமென நம்பினோம்" என்று பிரார்த்தித்த பின்னர் தாயானவள், "சுவாமி! என் தமயனான தனபதி தனக்குப்பிள்ளை யில்லையென்று என்மகனைத் தனக்கு மகனாகக்கொண்டு பலபேரறியத் தன் செல்வமெல்லா மளித்துத் தவத்திற்குச் சென்றனன். அவன் தந்த செல்வமெல்லாம் தாயாதிகள் தங்கள் பலத்தால் பறித்துக் கொண்டனர். ஆகையால் தனியாய் நின்ற நானும் என் சிறியமகனும் இப்படி வருந்துவது அருட்கட

லாகிய தேவரீருக்குச் சம்மதமோ'' வெனப் புலம்பி விழுந்து வணங்கி அப்படியே சோர்ந்து கடவுளருளால் கொஞ்சம் நித்திரைபோக, அவள்கனவில் ஸ்ரீசுந்தரேசப் பெருமான் ஓர்பிராம்மணவடிவு கொண்டு வந்து, “பெண் பாவாய்! நீ நாளை உதயத்தில் அரசசபையிற் சென்று உன் தாயத்தார் மீது வழக்கிட்டுக்கொள். அப்போது நாம்வந்து யாவருஞ் சம்மதிக்க வழக்குத் தீர்ப்போம்'' என்றனுக்கிரகித்த உடனே அவள் நித்திரை தெளிந்தெழுந்து வீட்டிற்கு வந்து மறுநாள் காலையில் சோமசுந்தரப் பெருமான் ஆலயத்திற் சென்று வணங்கி அவரருளியபடி நியாயசபையிற் சென்று தாயத்தார் பேரில்எதிர்வழக்கிட்டுக்கொண்டாள். அப்போது ஸ்ரீசுந்தரேசப்பெருமான் தனபதி செட்டியைப்போல் வந்து பங்காளிகளுக்கு முகங்காட்டி வெறுத்தும் மருமகனைத் தண்ணருள் கொண்டு பார்த்தும் தம் உள்ளக்குறிப்புக் காட்டி நியாயசபைமுன் நின்று “ஓ தெய்வமே! இங்கே அரசனில்லையோ, நியாயமறிந்த பெரியோர்க ளில்லையோ, நாங்கள் இப்படியும் வருந்தக்கடவுளின் சம்மதமோ'' எனப் பலவாறு வருந்துவதைக் கண்ட தாயாதிகள் மனங்கலங்கி பயமும் வெட்கமுங்கொண்டு நிற்க, அப்போது, தனபதியாக வடிவுகொண்ட ஸ்ரீ சுந்தரேசப் பெருமான் மருமகனைத்தழுவி தங்கைக்குத் தேறுதல் சொல்லி இப்படியும் திக்கற்றவர்க ளானீர்களோ வென்றழத் தங்கையும் மருமகனும் அழத் தனபதி பின்னும் மிக்க விசனமடைந்து மருமகனைத்தழுவி “நான் உனக்கு மார்பிலணிந்த ஐம்படையைக் கண்டிலேன், கால் சிலம்பையும் கண்டிலேன், மதாணியையும் கண்டிலேன், கடுக்கன், சுட்டிகளையும் கண்டிலேன். ஐயோ வெறும் தேகமா யிருக்கின்றனையே இந்த நகைகள் எவ்வளவு விலைபெறுமென்று பங்காளிகள் இவற்றையும் பறித்துக்கொண்டனர்'' என்று, நியாயசபைய்யின் முன்பு வாய்விட்டலறி தங்கையையும் மருமகனையும் தேற்றி ஸ்ரீ சுந்தரேசப் பெருமான் ஆலயத்தைப் பார்த்து சிரமேற் கைகுவித்து, “ஏ சுந்தரேசப் பெருமானே! எங்கள் வழக்கை இச்சபையின்முன் தேவரீரே தீர்த்துத் தரல் வேண்டும்'' என்றழுதார்.

இதனைக் கண்ட அரசன் முதலானோர் இருபக்ஷத்தாருடைய வழக்கையும் தாங்கள் விசாரிக்கையில், பங்காளிகள், வழக்கிடுவது குற்றமென்றும் இவர்தனபதி யல்லவென்றும் சொல்ல, தனபதி சபையைப்பார்த்து அந்தச் செட்டிகள் பெயர், குடிப்பெயர், பட்டப்பெயர், தாய் தந்தையர், மாமன், மாமி, பங்காளிகள் முதலிய யாவருடைய பெயரையும் ஒவ்வொருவருடைய அடையாளம், குணம், நடக்கை முதலியவற்றோடு தவறுமற் சொல்லக் கேட்டசபையார் இவர் தனபதி செட்டியென்றேமதித்து தீர்ப்புகொடுக்கத் தாயாதிகள் வழக்கிழந்து ஒவ்வொருவரும் குளத்திற்குப் போய்வருகிறேன் வெளிக்குப் போய்வருகிறே னெனப் பலவாறு சாக்குகூறிவிட்டு ஒவ்வொருவராய் வீட்டுக்குப் போய்விட்டார்கள்.

நியாய சபையாரும் தனபதியின் சொத்துகள்யாவும் அவர் மருமகனுக்கேயெனத் தீர்ப்புசெய்து வாங்கிக் கொடுத்தபின் நம் சுந்தரேசப் பெருமான் மாயமாய் மறைந்தருளினர்.

செல்வத்தை யிழந்த தாயும் தனயனும் பழயபடி செல்வத்தை யடைந்து வாழ்ந்து வந்தனர்.

ஆதலால் எல்லாம் வல்ல பரம்பொருளை மனதார எவர்கள்உள்ளன்புடன் நம்புகிறார்களோ, அவர்களைக் கடவுள் கைவிடமாட்டா ரென்பது நன்கு விளங்குகிறதன்றோ.

பரமதயாநிதியாகிய கடவுளை நாமும் மனமொழி மெய்களால் நம்பி வணங்கி இன்னல் நீங்கி நன்மைபெற் றுய்யுமாறு நல்லறிவளிக்க எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் பாலிப்பாஞக.

S. துரைசாமிப்பிள்ளை, கணக்கு,
தண்டரை.

"கெடுப்ப தொழி"

நீர்சூழ்ந்த வையத்து திலகம்போன்ற நம் நாட்டுத் தமிழ் மூதாட்டியாகிய ஔவைப்பிராட்டியின் அமுதவாக்கு 'கெடுப்ப தொழி'. இதன் பொருள் நம் சந்தாநேயர்கட்குத் தெரிந்தவிஷயமே. அதைக்காட்டி நாம் இவ்வியாசம் வரையநேர்ந்ததின் காரணம் பின்வருமாறு:—

இப்பூவுலகின்கண் மக்களாய்ப் பிறந்த நம் ஒவ்வொருவருக்கும் பகுத்தறியும் சக்தியை எற்கனவே கடவுள் அளித்திருக்கின்றனர். நாம் அப்பகுத்தறிவைக்கொண்டு எது நன்மையோ அதைச் செய்யவும், எது தீமையோ அதை ஒழிக்கவும் முயலவேண்டும். அங்ஙனமின்றி நாம் ஓர் நற்காரியத்தைச் செய்யப்புகும்போது ஒருவன் அக்காரியம் நிறைவேறவொட்டாமல் அதற்குத் தக்கமுயற்சி செய்வாஞயின் அன்னேன் அறிவு எத்தகைய பிரகாசமாயிருக்கு மென்பது நாம் கூறுமலே நன்கு விளங்கும். நண்பர்காள்! சேலம் ஜில்லா ராசிபுரம் தாலூகாவைச் சேர்ந்த சிங்களாந்தபுரம் என்னும் கிராமத்தில் 23-10-19 ல் ஓர் சங்கம் ஸ்தாபிதப்படுத்துவதாகவும், அச்சங்கத்திற்கு நம்மை விஜயம் செய்யும்படியாகவும் ஷை சங்கத்தின் அங்கத்தினர்கள் நமக்குக் கடிதம் வரைந்திருந்தனர். அச்சங்கத்தினங்கத்தினர்களின் கோரிக்கைப் பிரகாரமே நாம் அச்சங்கத்திற்குச் சென்று 23-10-19 ல், சங்கத்தின் நன்மைகள், தமிழின் சிறப்பு, ஒற்றுமை, முயற்சி, பெண்கல்வி, ஆனந்தபோதினியின் நன்மை இவைகளைப்பற்றி நமக்கெட்டியவரையில் உபன்யாசம் செய்தோம். 25-10-19 ல் ஷை யூர் உபாத்தியாயராகிய மகா-ா-ா-ஸ்ரீ வெங்கடரமண ஆச்சாரவர்கள் கைத்தொழில்களைப்பற்றி விரிவாய் உபன்யாசித்தனர். நாம் தெய்வபக்தி என்பதைப்பற்றி உபன்யாசித்தோம். சோதர சோதரிகளாகிய சந்தாநேயர்களே! மேற்கூறிய சிங்களாந்தபுரமென்னும் நகரில் வாசம் செய்யும் ஓர் மஹான் (அவர் பெயரைக்கூற நமக்கிஷ்டமில்லை.)—இன்னவரை மஹானென்று வரைய நம்கரம் நடுங்குகின்றது. ஆயினும் இவரை இழிவுபடுத்தக்கூடாதென்றும், இவரின் அறியாமையை எடுத்துக்காட்டி இன்னவரை நல்வழியில் திருப்பவேண்டும் என்ற எண்ணத்தோடும் இவ்வியாசம் வரையலாயிற்று. இவர் ஷை சங்கத்திற்கு விஜயம் செய்த ஒவ்வொருவரையும் தம்மிடம் வரவழைத்துக் கீழ்வரைந்துள்ளபடி அவர்கட்குப் போதித்தார்:—

" துர்ப்போதனை "

காமாக்ஷியம்மன் கோவிலில் இன்று சங்கம் நடந்ததா? சங்கத்தில் என்ன தெரிந்து கொண்டீர்கள்? அங்கு நடந்த பிரசங்கவிஷயம் உங்களுக்குத் தெரிந்த விஷயம்தானே? அப்படியிருக்க நீங்கள் ஏன் அங்குச் செல்லவேண்டும்? சங்கமா? என்ன சங்கமையா? மஹாசங்கம். அத்துஷ்டப்பையன்கள் காசு பணம் சம்பாதிக்க இவ்வேற்பாடு செய்து கொண்டார்கள். இவர்களுக்கும் சங்கத்திற்கும் எவ்வளவுதூரம். நான் கூறும்

ஒரு வெண்பாவுக்குச் சங்கத்தில் பிரசங்கித்த அதிகப்பிரசங்கிகளை வியாக்கியானம் செய்யச் சொல்லுங்கள் பார்ப்போம்? இச்சங்கத்தை இவர்கள் நிலை நிறுத்திவிட்டால் நான் என் மீசையை எடுத்துவிடுகிறேன். நீங்கள்மட்டும் இனிச் சங்கத்திற்குச் செல்லாதீர்க்ள். சென்றாலோ காசு பணம்பிடுங்கிவிடுவார்கள். ஜாக்கிரதையா யிருங்கள் என்று இன்னும் பலவாறு அவர்கட்குப் போதித்தனர். நண்பர்காள்! உபாத்திமைத் தொழிலை மேற்கொண்ட இவர் நம்மைத் தூஷித்ததைப்பற்றி நமக்குக் கிஞ்சித்தேனும் வருத்தம் கிடையாது. இன்னும் நம்மை எப்படித் தூஷித்தபோதினும் நமக்குச் சந்தோஷமே. இவருடைய அறியாமையைப்பற்றித்தான் நாம் மிக்க வருத்தமுறுகின்றனம். இத்தகைய துற்போதனை செய்து ஷை சங்கத்தைக் கெடுப்பதால் இவருக்குண்டாகும் நன்மை யென்ன? அல்லது இச்சங்கம் ஏற்படுவதால் இவருக்குண்டாகும் தீமையென்ன? க்ஷீணஸ்திதியிலிருக்கும் நம் தாய்ப்பாஷையாகிய தமிழ் இம்மஹானால் விர்த்தியடைய வேண்டியிருக்க இவரே நம்தாய்ப்பாஷை இன்னும் குன்றி மழுங்கிப்போக இத்தகையப்பிரயாசை எடுத்துக்கொண்டதைப் பற்றி நாம் பின்னும் வருந்துகின்றோம். அருமை பெருமை பொருந்திய நம் தமிழ் பிரகாசிக்க இச்சங்கம் அத்தியாவசியமா யிருக்கின்றதென்பது எனையோர்யாவர்க்கும்தெரிந்த விஷயமே. இத்தகைய சங்கம் ஒவ்வொரு கிராமாந்தரங்களிலும் நடைபெற்று வருகின்றது. நடைபெறவும் போகின்றது. இம்மஹானைப்போலவே ஒவ்வொரு கிராமங்களிலும் ஒவ்வொருவர் இத்தகைய தூர்ப்போதனை செய்யின் நம் தாய்ப்பாஷை எங்ஙனம் விர்த்தியாகும்? ‘கெடுப்பதொழி’ என்பதின் பொருளறிந்த இவரே இவ்வாக்கியத்திற்கு எதிரிடையாக நடக்கின் இவ்வருமை வாக்கியத்தின் பொருளறியாப் பாமரர் எப்படி நடப்பர்?

இம்மஹான் ‘நான் கூறும் ஒருவெண்பாவுக்குச் சங்கத்தில் பிரசங்கித்த அதிகப்பிரசங்கிகளை வியாக்கியானம்செய்யச் சொல்லுங்கள் பார்ப்போம்’ என்கிறார். வெண்பாவுக்கு வியாக்கியானம் கூறச்சொல்லும் இம்மஹானே ஷை சங்கத்திற்கு விஜயம் செய்து அவ்வெண்பாவிற்கு இவரே வியாக்கியானம் செய்வாராயின் அச்சங்கத்திற்கு விஜயம் செய்த யாவருமே கேட்டு ஆனந்த மடைவார்க ளன்றோ? நாமும் கேட்டு மனமகிழ்வோமன்றோ? அங்ஙனமின்றி, சங்கத்திற்குத் தாங்கள் விஜயம் செய்யவேண்டும் என்று அழைத்தவரையே இம்மஹான் தூஷிக்க ஆரம்பித்து விட்டார். இம்மஹான் அருமை பெருமை பொருந்திய நம் தாய்ப்பாஷையாகிய தமிழின் சிறப்பை அறியார்போலும்.

நண்பர்காள்! நம் பெருமைபொருந்திய முத்தமிழ் இப்போது பிரகாசமின்றி மழுங்கியிருப்பதால் நமது உடல், பொருள், ஆவி மூன்றையும் நாம் தத்தம் செய்தாவது இத்தமிழைப் பிரகாசிக்கச் செய்வது நமது கடமை என்று கூறியிருக்கின்றனர் ஆன்றோர்.

அங்ஙனமிருக்க இவர் இத்தகைய தூர்ப்போதனை செய்தது மிக்க விசனிக்கத்தக்கதே. நாம் இப்படி வரைந்தது குரோதத்தினாலாவது அல்லது அவரை இழிவு படுத்தவேண்டுமென்றாவது என்பதாக நண்பர்கள் நினைத்துக் கொள்ளக்கூடாது. நம் தாய்ப்பாஷையின் அபிவிர்த்திக்கு இத்தகைய இடையூறுகள் இனியும் நேரிடாதிருக்க வேண்டுமென்ற கருத்துகொண்டே யிதை வரைந்தோம்.

ஓர் சங்கத்தில் நாவல்களையே வாசிக்கக்கூடாதென்று உபன்னியாசம் [illegible]த்த நண்பர், சென்ற ஆவணி மாதச்சஞ்சிகை 57-ம் பக்கத்தில் நம்மால்

வரையப்பட்ட (நாவல்கள் வாசிப்பதின் குணம் என்ற) வியாசத்தைக் கண்ணுற்று நம்மிடம் நேரில்வந்து பின்வருமாறு கூறினர் :—

"நண்பரே! என் குற்றத்தை நம் ஆனந்தன் மூலமாய் எனக்கு விளக்கிக் காட்டி என் துரபிப்பிராயத்தை நீக்கி என் குற்றத்தை நானே ஒத்துக் கொள்ளும்படி செய்த தங்கட்கும், மகா-ஈ-ஈ-ஸ்ரீ பத்திரிகாசிரியரவர்கட்கும் நான் மிக்க நன்றியறிதலுடையவனு யிருக்கின்றேன்" எனக் கூறிச் சென்றனர்.

நண்பர்களே! இனிமேலாவது இம்மஹான் துர்ப்போதனை செய்வதை விட்டுவிட்டு ஷை சங்கத்திற்கு ஒரு அவயவியாகச் சேர்ந்து ஷை சங்கத்தை நடாத்தி நம்தாய்ப்பாஷையை முன்னுக்குக்கொண்டுவரவேணுமாய் எல்லாம் வல்ல இறைவனுகிய சச்சிதானந்த பரம்பொருளை நாம் முழுமனதுடன் பிரார்த்திக்கின்றோம். சுபம்! சுபம்!! சுபம்!!!

E. V. துப்புசாமி முதலி,
எழூர். (ராசிபுரம் தாலூகா.)

குறிப்பு:—அன்னியரால் மகான் என்று கருதப்படும் நம்மவரில் ஒருவரே மேற்கண்டவாறு நம் தாய்ப்பாஷையின் அபிவிர்த்திக்கு இடையூறு செய்வது உண்மையாயின், அந்தோ! இது மிக்க விசனிக்கத்தக்க விஷயமேயாகும். அன்னியரால் மகான் என்று மதிக்கத்தக்க ஒருவர்க்கு மீசையும் அதன் குறியாகிய உரோஷமும் அனுபவத்தில் இருப்பதாயின், அந்தோ! அதைப்பற்றி என்ன கூறுவதென்று நமக்கு விளங்கவில்லை. எனெனில் இது தன்னை யீன்ற தாய்க்கே தீங்கிழைப்பதினும் கொடிய செய்கையன்றோ! சச்சிதானந்தப் பரம்பொருளாகிய பரமன் இத்தகைய இடையூறுகள் நம்தாய்ப்பாஷைக்கு நேராவண்ணம் பாதுகாத் தருள் புரியவேண்டுமாய்ப் பிரார்த்திக்கின்றோம். 'எறும்பும் தன் கையால் எண்சாண்' என்ற ஆன்றோர் வாக்கையும், நம்மை விடக் கற்றோர் எண்ணிறந்தோர் உண்டென்ற உண்மையையும் இவர் உணராததே மிக்க விசனிக்கத் தக்க பெருங்குறையாகும். பத்திரிகாசிரியர்.

கைவல்ய நவநீத வசனம்

(179-ம் பக்கத்தொடர்ச்சி)

இதுகாறும் அத்தியாரோபம் என்ற கற்பனையால் தனுகரண புவன போகங்களாகிய யாவும் உற்பத்தியான வழியைக்கூறினோம். இனி கனவு காணும்போது அது உண்மையாகவே தோன்றினும், விழித்தவுடனே அக்கனவு பொய்யென்று விளங்கி விடுவதைப்போல், கற்பனையால் அதாவது அத்தியாரோபத்தால் உண்டானயாவும் அநித்தியமாகிய பொய்யேயென்று உணரும் மார்க்கத்தைக் கூறுவாம். இம்மார்க்கத்திற்கு அபவாத மார்க்கம் என்றுபெயர். ஆகையால் இப்பிரபஞ்சம் முதலியயாவும் கனவுபோற் பொய்யேயென்று ஆராய்ச்சியால் நிச்சயித்துத் துணிந்தவனே ஞானவானவான்.

[இச்சந்தர்ப்பத்தில் உலகு கனவுபோல் பொய் என்று கூறியதைப் பற்றி, "கனவில் விசேஷமாய் நாம் சாக்கிரத்தில் கண்டபொருள்களையும் அனுபவங்களையும் பற்றியே காண்கிறோமாதலால், இப்பிரபஞ்சத்தைப் போல் மெய்யான ஒரு பிரபஞ்சத்தை நாம் கண்டிருந்தால்தானே இப்போது அதைப்பற்றிக் கனவு காணலாகும்? ஆகையால் மெய்யானபிரபஞ்சம் ஒன்று இருக்கவேண்டுமே" என்பது முதலான வாதங்களில் பிரவேசிக்க

லாகாது. இத்திருட்டாந்தத்தில், 'விழித்தவுடன் கனவு பொய்யாய் விடுவதுபோல் ஞானமாகிய விழிப்பு வந்தவுடனே இப்பிரபஞ்சமும் பொய்யாய்ப்போய்விடும்' என்றமட்டிலேயே நாம் கவனிக்க வேண்டும்.

இவ்வாறே அத்தியாரோபத்தில் 'கயிற்றில் பாம்புதோன்றுவதுபோல் சச்சிதானந்த சொரூபமே நமது பிராந்தியால் பிரபஞ்சமாய்த் தோன்றுகிறது' என்ற திருட்டாந்தத்தில், "நாம் முன்னமே பாம்பு என்ற ஒன்றை மெய்யாகவே கண்டிருப்பதால் கயிற்றில் பாம்பு தோன்றுகிறது. மேலும் கயிற்றில் பாம்பின் சாமானிய உருவமாகிய நீட்சி திரட்சி (நீளமாயும் உருண்டையாயும் இருத்தல்) என்றவை யிருக்கின்றன. ஆகையால் கயிற்றில் பாம்பே தோன்றுகிறது - வேறு தவளை, நாய், புலி முதலியன தோன்றுவதில்லை. ஆகையால் பிரபஞ்சம் என்ற ஒன்றை முன்பு கண்டிருந்தால் தானே அத்தியாரோபத்தால் பிரபஞ்சம் தோன்ற வேண்டும்? அதோடு பாம்பின் சாமானிய இலட்சணம் கயிற்றி லிருப்பதுபோல் பரப்பிரம்மத்தில் பிரபஞ்சத்தின் இலட்சணம் இருக்கவேண்டுமே!" என்பன வாதிய வாதங்களும் வீண்வாதங்களேயாகும். இதில் "உண்மையான ஒரு பொருள் வேறு ஒரு பொருள்போல் தோன்றுகிறது" என்றவரையிலுமே நாம் எடுத்துக்கொள்ள வேண்டும்.]

அபவாதம்.

கனவுபோல், ஆரோபத்தால் உண்டான பிரபஞ்சம் பொய்யென்று அறியுமார்க்கமே அபவாதம் என்று கூறினோமல்லவா. அது எதுபோலெனில், முன் ஆரோபத்தால் கயிற்றைக்கண்டு அரவென்று மருண்ட ஒருவன் பிறகு தீபவொளியைக் கொண்டு உற்றுநோக்கிய பின், "சே! இது பாம்பல்ல, கயிறு" என்றுதெளிந்து பயம் ஒழிவதுபோல், ஞானசாரியருடைய உபதேசத்தாலும் சாத்திர ஆராய்ச்சியாகிய ஒளியாலும் "நம்முன் தோன்றும் நானாவிதமான இப்பிரபஞ்சம் உண்மையல்ல, பொய்த் தோற்றமே, உண்மையாயுள்ளது ஞானமயமாகிய சச்சிதானந்த பரப்பிரம்மமே" என்று ஐயமறத் தெளிவதே அபவாதமாகும்.

இன்னும் காரியகாரண சம்பந்தத்தை நோக்க, காரண மின்றிக்காரிய மில்லையாதலால், ஆரோபத்தால் உற்பத்தியான ஒவ்வொன்றையும் முறையே ஒடுக்கிப்பார்த்து முடிவில் சச்சிதானந்த பரப்பிரம்மமே நித்தியமாய் யாவுமாய் நிலைத்திருப்பது என்று காண்பதும் அபவாதமேயாம். அவ்வாறு ஒன்றிலொன்று உதித்தமுறையே ஒடுக்கிப்பார்ப்பது எவ்வாறெனின்;—

சூக்கும பஞ்சபூதங்களின் தமோகுணத்தி லுண்டான ஸ்தூல பஞ்சபூதங்களிலுதித்த தனுகரண புவனபோகங்கள், எதெது எந்தெந்த பூதத்திலுதித்ததோ அதது அந்தந்த பூதத்தி லொடுங்கிவிட, அத்தூல பூதங்களும் மேற்கூறிய சூக்கும பூதங்களின் தமோகுணத்தில் ஒடுங்கிவிடும். இவ்வாறே சூக்கும பூதங்களின் சத்துவ குணததின் சமட்டியில் அந்தக்கரணங்களும் வியஷ்டியில் ஞானேந்திரியங்களும் உதித்தன வாதலால், அவற்றில் எவையெவை யெந்தெந்த பூதத்தில் உற்பத்தியாயினவோ அவையவை யந்தந்த பூதத்தின் சத்துவகுணத்தில் ஒடுங்கும். இவ்வாறே, இரஜோ குணத்தின் சமட்டியில் உண்டான பிராணாதி வாயுக்களும் வியட்டியில் உண்டான கன்மேந்திரியங்களும் அவையவை யுண்டான பூதங்களில் ஒடுங்கிவிட முக்குணங்களையுடைய தன்மாத்திரை பூதங்களே எஞ்சி நிற்கும்.

பிறகு அப்பூதங்களும் வந்த முறையே யொடுங்கும். அதாவது பிருதிவி அப்புவில் கறைந்தொடுங்கும், அப்பு தேயுவில் சுவறியொடுங்கும், தேயு வாயுவில் அணைந்தொடுங்கும், வாயு ஆகாயத்தில் சலனமின்றி யொடுங்கும், ஆகாயம் விக்ஷேபசத்தியி லொடுங்கும், விக்ஷேப சத்தியும் ஆவரண சத்தியும் தாம் உற்பத்தியான மூலப்பிரகிருதியின் தமோகுணத்தி லொடுங்கும். மூலப்பிரகிருதியின் சத்துவ ரஜோகுணங்களில் உற்பத்தியான வைகளும் அந்தந்த குணத்தில் ஒடுங்கியபின் முக்குணங்களை யுடைய மூலப்பிரகிருதியே எஞ்சி நிற்கும். அதுவும் தான்தோன்றிய சச்சிதானந்த பரப்பிரம்மத்தில் ஒடுங்கிவிடும். முடிவில் சச்சிதானந்த மயமாகிய அப்பரப்பிரம்மம் ஒன்றுமே முக்காலத்தும் உள்ளதாய் விளங்கிக்கொண்டிருக்கும்.

காரிய காரண ரீதியாய்ப் பார்க்கும்போது காரணமே முக்காலத்துமுள்ள சத்தியப் பொருளாகவும், காரியம் முன்னுமின்றிப் பின்னுமின்றி இடையில் மட்டும் நாமரூபங்களையே ஆதாரமாய்க் கொண்டு தோன்றும் அநித்தியப் பொருளாகவும் முடியும்.

திருட்டாந்தமாய்க் குடத்தை யெடுத்துக்கொண்டால், காரணமாகிய மண்ணே குடமாய்த் தோன்றுகிறது. அந்த உருவம் ஏற்படுமுன் அதற்குக் குடமென்று பெயரில்லை. குடமுடைந்து உருவம் அழிந்தபின்னும் அதற்கு அப்பெயர் இல்லை. இடையில் மட்டுமே அப்பெயர் உண்டு. ஆனால் காரணமான மண்ணோ குடம் உண்டாகும் முன்பும் இருந்தது, குடம் அழிந்தாலும் இருக்கும்; குடம் உருவோடிருக்கையிலும் இருக்கிறது. அப்போது நாமரூப நாட்டத்தை விட்டு அது என்ன வஸ்துவென்று நோக்கினால் மண்ணேயாகும்; மண்ணை நீக்கிப்பார்த்தால் குடமேயில்லை. முக்காலத்து முள்ளது மண்ணே யன்றி குடமல்ல. பொன்னும் நகையும், பஞ்சும் ஆடையும் என்ற திருட்டாந்தங்களிலும் இவ்வாறே காரணமாகிய பொன்னும் பஞ்சுமே முக்காலத்து முள்ள நித்திய வஸ்துக்கள் என்றுணரலாம்.

அவ்வாறே நாமரூபமாய்த் தோன்றும் பிரபஞ்சமனைத்தும் உண்மையில் சச்சிதானந்த சொரூபமாகிய பரப்பிரம்மமே. குடத்தின் நாமரூபத்தை நீக்கிப்பார்த்தால் மண்ணே தோன்றுவது போலும், ஆபரணத்தின் பெயரையும் உருவத்தையும் நீக்கி நோக்கிடின் பொன்னே புலப்படுவது போலும், கடலிலுள்ள அலைநுரை யிவற்றின் பெயர் உருவங்களைக் கவனியாது அவையென்ன வென்று நோக்கிடின் ஜலமே தோன்றுவது போலும், பிரபஞ்சத்திலுள்ள நாமரூபங்களில் நாட்டத்தைச் செலுத்தாது நோக்கின் யாவும் சச்சிதானந்த மயமே யென்றும், அதையன்றி அன்னியமான வேறு ஒன்றுமேயில்லை யென்றும் திடமாய்த் தோன்றும். இவையிரண்டில் ஒன்றில் நாட்டம் வைத்தால் மற்றொன்று தோன்றாது மறைந்திருக்கும். நாமரூபத்தில் நாட்டம் வைத்திருக்குமட்டும் சச்சிதானந்தமயம் தோன்றாது. மரத்தால் செய்யப்பட்ட ஒரு யானையைக் காணும் ஒருவன் அதன் பெயரிலும் உருவத்திலு மட்டுமே திருஷ்டியைச் செலுத்தி “ஆகா! நேர்த்தியான யானை; இது எவ்வளவு கோபப்பார்வையாய்ப் பார்க்கிறது பார்; இதன் தும்பிக்கோல் மட்டும் இன்னும் கொஞ்சம் நீளமாயிருக்க வேண்டும்; காட்டில் இந்த யானைகள் என்னவேகமாய் ஓடுகின்றன தெரியுமா!” என்கிறான். இவன் இது உண்மையில் மரம் என்பதைக் கவனிக்கவில்லை. ஆகையால் மரத்தின் இலட்சணம் இவனுக்குப் புலப்படவேயில்லை. இதனால் யானையென்கிற பெயரும் அந்த உருவமும் மரத்தின் இலட்சணத்தை மறைத்து விட்டன வென்று அறியலாகும்.

இன்னொருவன் அந்த யானையையே கண்டு அதன் அருகிற்சென்று அதைத்தடவி, தட்டி, முகர்ந்துபார்த்து "பேஷ்! இது நல்ல வயிரமேறிய கருங்காலிமரம்; எங்கும் போரலாவது கணுவாவது கிடையாது; இரும்பினும் உறுதியுடையது. இதில் சிறுஉருவங்களும் இன்னும் பலவிதச்சாமான்களும் செய்யலாம்," என்கிறான். இவன் யானையின் நாமரூபங்களைக் கவனியாது நோக்கியவனாதலால் மரத்தைமட்டுமே கண்டு அதன் இலக்ஷணங்களை யுணர்ந்து அதைப் புகழ்ந்து கொண்டான். இவன் திருஷ்டிக்கு மரமே தோன்றியதால் யானையின் உருவம் முதலியன யாவும் மரத்தில் மறைந்து விட்டன.

"மரத்தை மறைத்தது மாமதயானை
மரத்தில் மறைந்தது மாமதயானை
* * * * * "

என்று திருமூலநாயனார் திருமந்திரத்தி லருளியது ஈண்டு சிந்திக்கத் தக்கது.

ஆவரண சத்தியின் தன்மை.

சீடன்:—"எனது ஆசாரியரே! மூலப்பிரகிருதியின் தமோ குணத்தில் ஆவரணம், விக்ஷேபம் என்ற இரண்டு சத்திகள் உதித்தன வென்று அருள்செய்தீர்கள். ஆனால் அவற்றில் விக்ஷேபசத்தியா லுண்டாகும் பிரபஞ்ச உற்பத்தியைப் பற்றி மட்டும் கூறினீர்களேயன்றி, ஆவரண சத்தியைப்பற்றி யொன்றும்கூறவில்லையே; ஆகையால் ஆவரணசத்தியின் தன்மை யின்ன தென்பதையும் தயவுடன் அருள்புரிய வேண்டுகிறேன்" என்று வினவினான்.

குரு:—ஈசுரன், தம்மைத்தாம் அறிந்தஞானிகள், இவர்களைத்தவிர மற்றசீவர்களின் ஞானக் கண்ணானது குருடாகும்படி, (மூடுபனியானது பூமியிலுள்ள பொருள்கள் இன்னவை யின்னவை யென்று புலப்படா வண்ணம் ஊனக்கண்களை மறைப்பது போல்) மறைப்பதே ஆவரணசத்தியின் சுபாவமாகும். அதாவது, பரப்பிரம்மத்திற்கும் வெளியில் தோன்றும் நாமரூபமானபிரஞ்சத்திற்கும், உள்ளேயுள்ள ஆன்மாவிற்கும் மனமாதிதத்துவங்களுக்கும் உள்ள வித்தியாசம் இன்னதென்று அறிவிற்குச் சற்றும் விளங்கா வண்ணம் மறைத்துவிடும். ஆகையால் ஜனன மரணமாகிய பெரிய வியாதியை யுண்டாக்குவது இதுவேயாகும்.

இதில் இன்னொரு விசேடமுண்டு; அதாவது "கயிறு என்ற ஒன்றைக் கண்டே பாம்பு என்ற மிரட்சி (ஆரோபம்), உண்டாகிறது. ஆதாரமாகிய அக்கயிறு தோன்றாது அடியோடு மறைந்து இருந்தால், ஆரோபமாகிய பாம்பு எப்படித் தோன்றும்? தோன்றாதல்லவா? அப்படிக்கின்றி கயிறு என்ற ஆதாரம் மறையாமல் நன்றாய்க் கயிறு என்று தெரிந்தால் அப்போதும் ஆரோபமாகிய அரவம் தோன்றக் காரணமில்லையே" என்ற ஆக்ஷேபனையுண்டாகலாம். அதற்குச் சமாதானம் கூறுகிறோம்.

ஆதாரம் சமம் அல்லது சாமான்யம் என்றும், விசேடம் என்றும் இரு வகைப்படும். அவற்றில் அதிககாலம் அதிகதேசங்களில் உள்ளது எதுவோ அதுவே சாமான்யபாகம் (ஈண்டுதேசம் எனின் இடம் என்பது பொருள்). அற்பகாலம் அற்பதேசங்களில் உள்ளது விசேடபாகம். அதாவது ஒருவஸ்

துவை நாம் முதலிற்காணும்போது மேல்தோற்ற மாத்திரமாய்த் தெரிவதே அதன் சாமான்யபாகம். பிறகு பூரண விவரத்தோடு இன்னவஸ்து வென்று தெளிவாய்த்தெரிவதே அதன்விசேடபாகம். அதாவது எந்தப்பாகம் மறைந்திருந்தால் அவ்வஸ்துவே யடியோடு புலப்படாதோ அப்பாகமே சாமான்ய பாகம். கயிற்றில் முதலில் எதோ ஒன்று நீளமாகவும் திரட்சி யாகவும் தோன்றுகிறது; அதுவே அதன் சாமான்யபாகம். பிறகு அது நாரினுலோ நூலாலோ திரிக்கப்பட்ட தென்று காணப்படுவதே அதன் விசேடபாகம். தூரத்தில் எதோ ஒன்று நான்கைந்தடி உயரமாகவும் ஒரு கம்பம்போல் பருமனுகவு மட்டும் தோன்றுகிறது. அதுவே சாமான்யபாகம். பிறகு அது எவ்வித உருவமு மின்றி திரணையாய் இருக்கும் மரக்கட்டை என்று காண்பதே அதன் விசேஷபாகம். ஒரு வஸ்துவின் விசேஷபாகம் புலப்படாமல் அதன் சாமான்யபாகமட்டும் தோன்றும்போதுதான் அது "கயிருே பாம்போ," "கட்டையோ மனிதனே" என்ற ஐயம் உண்டாகிறது. விசேட பாகம் நன்ருய்ப் புலப்பட்டு விட்டால் சற்றும் ஐய மின்றி இது இன்ன வஸ்துதான் என்ற உண்மை தெரிந்து விடுகிறது.

இதனுல் ஒரு வஸ்துவின் விசேடபாகத்தில்தான் ஆரோபமுண்டாவதேயன்றி சாமான்யபாகத்தி லுண்டாவதில்லையென்று நன்குணரலாகும். சாமான்யபாகம் தோன்ருதிருந்தால் வஸ்துவே யடியோடுதோன்ருது. அப்போது ஆரோபம் உண்டாகக் காரணமே யில்லைதான். சாமான்ய பாகமட்டும் தோன்றி விசேடபாகம் மறைந்திருப்பதாலேயே அப்பாகத்தில் ஆரோபம் தோன்றுகிறது.

தாஷ்டாந்தத்தில் 'நான் இருக்கிறேன்' என்ற உணர்வே சாமான்ய பாகம். அதை அஞ்ஞானம் என்னும் ஆவரணம் மறைக்கமுடியாது. ஆனல் அந்த நான் என்பது உண்மையில் பரப்பிரம்மத்தின் அம்சம் என்பதும் அதைப்போலவே சச்சிதானந்தசொரூபமுடையது என்பதுமாகிய விசேட பாகத்தையே அறியவொட்டாது ஆவரணம் மறைத்து விடுகிறது.

(தொடரும்) சீடன்.

திருஷ்டாந்த வாக்கியங்கள்.

1. பிறர் இரகசியத்தில் செவிடனுகவும், பிறர்மனையாளிடத்துக் குருடனுகவும், பொருமை சொல்வோனிடத்து ஊமையாகவும், ஒருவன் இருந்தானுனல் அவனுக்கதுவே பெரியதர்மமாம்.

2. மரக்கட்டையைச் சார்ந்தபுல், கலப்பைக் கசையாது. அதுபோல் வலியாரைச் சேர்ந்த மெலியாரிடத்துப் பகைவர் கோபஞ் செல்லாது.

3. காலத்தில் பகைவரிடத்தில் பொறிக்கறிச்சோற்றைப்பெற்ருலும் அது வேம்பாகும். அகாலத்தில் இலைக்கறி சோறிடுவோராகிலும், இனத்தாரிடத்தில் உண்டல் இன்பம்.

4. அறிவில்லார் சிநேகத்திலும் பகைநல்லது. வியாதியினும் மரணம் நல்லது. ஒருவரை இகழ்தலினுங் கொல்லுதல் நல்லது. ஒருவனை வீணுகப் புகழ்தலினும் வைதல் நல்லது.

5. சரீரத்தில் தைத்த அம்பை வாங்கிவிடலாம்; மனத்தில் தைத்த கடினமொழிகளை எந்த உபாயத்தினுலும் வாங்கிவிடலாகாது.

6. ஒருவனுடைய நிழலானது நெடுந்தூரம் போயினும் அவனை விடாது அவனடியினிடத்தே தங்குவதுபோல, ஒருவன் பிறருக்குக்கெடுதிசெய்தால் அது அவனைத் தொடர்ந்து சொல்லும்.

7. நெருப்பைத் தெரிந்து தீண்டினாலும் தெரியாமல் தீண்டினாலும், அது சுடாமல் விடாது; அதுபோல் தீவினையைத் தெரிந்து செய்தாலும், தெரியாமற் செய்தாலும் அது—பாவம் பாவமேயாம்.

8. பறவைகளில் காக்கைநீசம், மிருகங்களில் கழுதை நீசம், சந்நியாசிகளில் கோபமுடையவன் நீசன், பிறரைச் சதா தூஷித்துத் திரியும் ஒருவன் எல்லாரைக் காட்டிலும் நீசன்.

9. செல்வம் வருங்கால், தேங்காயில் ஜலம் வந்ததைப்போல் தனக்குத் தானேவரும். அதே செல்வம் போகுங்காலம்வரில், யானை விழுங்கின விளாம்பழத்துள் விதைபோல் மாயமாய்ப் போகும்.

10. நீங்கினாற்சுடாத நெருப்பைப் பார்க்கிலும், நீங்கினாலுஞ்சுடுஞ் சிவனடியார் திரவியாபகாரம் மிகக்கொடியது.

11. "மரக்கோணலைத் திருத்துவது பஞ்சுநூல்"
"மனக்கோணலைத் திருத்துவது சாத்திரநூல்"

பஞ்சுநூலானது, மரத்தைப் பலகை முதலியவையாக அறுக்க ஒழுங்கு படச் செய்யும்.

வேதாகம சாஸ்திரநூலோ, விஷயாதிகளைப் பற்றியலையும் மனதைப் படிப்படியாகத் தன்னைத்தா னறியும் நிலையில்சேர்க்கும்.

12. தானமானது - யோக்கியரிடத்தில் பிரகாசிக்கும். அயோக்கியரிடம் பிரகாசிக்காது—மழைத்துளியானது, முத்துச் சிப்பியில் விழுந்த மாத்திரத்தில் பளபளப்பான முத்தாகக் காணப்படும்; மணலில் விழுந்தால் ரூபமே தெரியாதல்லவா.—

13. துஷ்டனுடைய சகாயத்தினால் ஒரு காரியமாகவேண்டி யிருந்தால் கொஞ்சமாய் அவனிடம் சகவாசஞ் செய்தல்வேண்டும். அதிக சகவாசம் செய்தல் கூடாது. தாம்பூலந் தரிக்கும்போது சுண்ணாம்பைக் கொஞ்சமாய் உபயோகிப்பார்களேயன்றி, அதிகமாகச் சேர்க்கமாட்டார்களன்றோ.

14. தூரத்தி லிருந்தாலும், விவேகிகள் பிறருடைய குணவிசேஷங்களை நன்றாக அறிந்து கொள்வார்கள்; அவிவேகிகள் சமீபத்திலிருந்தாலும், அறியமாட்டார்கள். வெகுதூரத்திலிருந்துவரும் வண்டினங்கள், தாமரைப் புஷ்பத்திலுள்ளதேனை யறிந்து கொள்கின்றன; தவளை சமீபத்திலிருந்தும் அதை அறியமுடியா தல்லவா:—

S. கிருஷ்ணசாமி ஐயர்,
போர்ட் ஸ்கூல் டீச்சர், வசிஷ்டபுரம்.

வர்த்தக விந்தை

இப்பூவுலகின் கண் மானிடராகப் பிறந்த ஒவ்வொருவரும் தத்தம் புகழையே விரும்புகிறார்கள். அதற்கிணங்கச சிலர் தம்மைத்தாமே பெருமையாகப் புகழ்ந்து பேசியும் வருகின்றனர். அது போலவே அன்னவர்கள்

தாங்கள் செய்யும் வியாபாரங்களும் விருத்தி யாக வேண்டுமென்று நினைக்கிறார்கள்.

அது போலவே நம் தென் இந்தியாவிலும் வியாபாரம் கைத்தொழில் விருத்தியாகிக்கொண்டுவருகின்றன. ஆனால் சிலர் தம்வியாபாரத்தைப்பற்றி சமாச்சார பத்திரிகைகளின் வாயிலாகவும், துண்டுப் பிரசுர மூலமாகவும், தங்கள் சரக்கே உண்மையான தென்றும், சகலராலும் ஆதரிக்கப்பட்ட தென்றும், பலவருஷங்களாக ஆராய்ச்சி செய்து புதிதாகக் கண்டு பிடிக்கப் பட்ட தென்றும், இதை யாவரும் சந்தேக மன்னியில் வாங்கி உபயோகிக் கலா மென்றும், இதை மிஞ்சியது வேறொன்றும் கிடையாதென்றும் மற்றவர்கள் செய்யும் பிரசுரத்தைக் கண்டு ஏமாந்து போகாதீர்களென்றும் ஒவ்வொருவரும் படாடோபமாகப் பிரசுரம் செய்கிறார்கள். உண்மையில் இவைகளைப் பரிக்ஷிக்கும் பக்ஷத்தில் (அவ்விதம் அன்னவர்கள் பிரசுரம் செய்தது போல்) குணம் இருப்பதாகத் தெரியவில்லை.

இப்படி நாம் கூறுவதின் கருத்து, அவ்விதமான பிரசுரங்க ளனைத் தும் பொய்யெனச் சாதிக்க முயன்ற கருத்தல்ல. இதுபோன்ற பொய்ப் பிரசுரங்களே பெரும்பாலனவை என்பதைத் தெரிவிக்கவே நினைத்தனம்.

இன்னும் சிலர் ஏதாவது ஒரு நாமதேயத்தைக் கொண்டு கம்பெனி யெனப் பெயர்வைத்து விலைப்புஸ்தகங்களும் (Catalogue) தயார்செய்து சமாச்சாரப் பத்திரிகை மூலமாகப் பிரசுரம்செய்து விடுகிறார்கள். அந்தப் பிரசுரத்தில் கண்ட மேல்விலாசத்துக்கு வேண்டியவைகளுக்கு எழுதினால் உடனே வி. பி. மூலமாகக் கிடைத்து விடுகிறது. ஆனால் அந்த விலாசத்தில் கண்ட நெம்பருள்ள இடத்தை நேரில் பார்க்கப்போனால் அது அன்னவர் கள் பிரசுரம் செய்த வியாபாரத்துக்கு சம்பந்தப்பட்ட விடமாயில்லாமல் ஏதோ ஒரு வீடாகவோ அல்லது வாசகசாலை மாதிரியாகவோ இருக்கிறது. அதைப்பற்றி விசாரிக்கப்போனால் அந்தப்பெயருடைய கம்பெனியே கிடை யாது என்றும், ஆனால் இன்ன விலாசதாருக்கு அவ்விதமான பெயர் போட்டுக் கடிதங்கள் போக்கு வரத்தாக இருக்கின்றனவென்றும் ஆர்டர்வந் தால் இவ்விடம் கடைகளில் வாங்கி வி. பி. யில் அனுப்புகிறார்கள் என்றும் கூறுகிறார்கள். இவைகளும் வியாபாரத்தில் லாபத்தைக்கருதிச் செய்யும் கலிகாலத்துத் தந்திரஜாலமே.

மற்றும் சில இடங்களில் அநேக தந்திரங்கள் மோசங்கள் நடை பெறு கின்றன. சின்னாட்களுக்கு முன் ஒரு காப்பிஹோட்டலுக்குள் சென்று காப் பிப்பானம் கொண்டுவரும்படி சொன்னோம். அவர்கள் நுரையுடன் கூடிய தாக இரண்டுதட்டுகளில் காப்பி கொண்டுவந்து வைத்தார்கள். அதைச் சாப்பிட்டு முடிந்த உடன் சீயக்காய்த் தண்ணீர் சாப்பிட்டது போன்றே யிருந்தது. உண்மையாகவே காப்பி அதிகமாகத் தோன்றுவதற்காகவும் ஸ்ட்ராங்காப்பி யெனக்காட்டவும் சீயக்காய்த் தண்ணீர் சேர்ப்பதாகத் தெரிய வருகிறது.

வேறு சில காப்பி தேயிலை (Coffee and Tea Works Company) டப்பா அடைக்கும் இடங்களில் காப்பியின் மேல் ஓடுகளைப் பொடிசெய்து அநேக வாசனைத் திரவியங்களால் வாசனை யேற்றி டப்பாக்களில் அடை த்து மேலே நயம் டிரேட் மார்க்கு (Trade Mark) ரிஜிஸ்டர் மார்க்கு (Registered Mark) என்று போட்டு விநோதமான பெயர்களை யெழுதி விற்பனை செய்கிறார்கள். தேயிலைகளிலும் இவ்விதமாகவே அநேக சேர் மானங்கள் சேர்த்து விற்பனை செய்கிறார்கள்.

அவர்களையே கண்டு இவ்விதமான மட்டச்சரக்குகளைக் கலந்து விற்பனை செய்யலாமா வென்று கேட்டால், "என்ன செய்கிறது. குறைந்த விலைக்குக் கேட்போருக்கும் கொடுக்கவேண்டிய திருக்கிறதே" என்று சமாதானம் சொல்லுகிறார்கள். என்னே ! ஆச்சரியம் ! என்னே ! இவர்கள் தம் வியாபாரம் !

நம் நாட்டு வியாபாரம் கைத்தொழில்கள் சிறுகச்சிறுக உற்பத்தியானாலும் இவ்விதச்செய்கையாலேயே நீடித்து நிற்காமல் நாளுக்கு நாள் சோர்ந்து விடுகிறது. இவ்விதம் எத்தனையோ கம்பெனிகள் திறக்கப்பட்டு சிறிதுகாலத்திலேயே மூடப்பட்டிருக்கின்றன.

மேல்நாட்டு வியாபாரங்களைப் பாருங்கள். ஒரு சரக்குக்கு ஒரு ரிஜிஸ்டர் மார்க்கு ஏற்படுத்தி வெளியேற்றி விட்டால் அதில் சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி விலை கூடுதல் குறைதல் ஏற்படுமே தவிர எந்த முகாந்திரத்தைக் கொண்டும் சரக்கில் மாறுதல் ஏற்படுவதில்லை. அதனாலல்லவா மேல்நாட்டு வியாபாரங்கள் என்றும் மேன்மேலோங்கிக் கீர்த்தி பெற்று நடந்துவருகின்றன. நம் நாட்டுவியாபாரங்கள் என்றுதான் முன்னேற ஈசன் அருள் புரிவரோ அறியோம்.

நம்மவர்களில் ஒவ்வொருவரும் சிரத்தையுடன் மேல் நாட்டார்களுடைய ஒவ்வொரு வழியையும் ஆராய்ச்சி செய்து அதைப்பின்பற்றிக் கல்வியிலும் கைத்தொழிலிலும் முன்வந்தார்களானால் நம் தாய்நாட்டிற்கே பெருங் கீர்த்தி விளைவிப்பதோடு, தாய்நாட்டு வியாபாரங்களும் நாளுக்கு நாள் விருத்தியாகி அவர்களும் நெடுநாள் அழியாப்புகழுடன் இருப்பர். எல்லாம் வல்ல ஈசன் அருள்புரிவாராக. சுபம். சுபம். சுபம்.

ஓர் நண்பர்.

குறிப்பு:—மேற்கண்ட யாவும் உண்மையான விஷயங்களே யென்று மிக்க விசனிக்கிறோம். நம்மவர்கள் முன்னுக்கு வரக்கருதிச் செய்யும் முயற்சிகளில் பெரும்பாலும் "குளிக்கப்போய்ச் சேறுபூசிக் கொள்வது" என்ற பழமொழியையே பின்பற்றி நடக்கிறார்கள். மேல் நாட்டார் போல் வெளிவேஷம் போடுவதில் மட்டும் முதன்மையா யிருக்கின்றனர். பிறகு தங்கள் நடவடிக்கைகளால் உண்டாகும் அவமானம், இழிசொல், ஏளனம் முதலிய கெடுதிகளைச் சற்றும் கவனிப்பதே யில்லை. அதிலும் இப்போது வரவர எந்தச்சாமானிலும் வேறு எதையேனும் கலப்பதிலேயே நாட்ட முடையவர்களா யிருக்கிறார்கள். சற்றேனும் கௌரவத்தின்மேலும் சத்தியத்தின் மேலும் திருஷ்டியின்றி, கடவுளின் ஆக்ஞையையும் கவனியாது பெரும்பாலோர் இவ்வாறு நடந்து கொள்வது நமது தாய்நாட்டின் கெட்டகாலமேயாக்கும். நமது தாய்நாட்டின் கௌரவத்தைக்குறைக்கும் இவர்கள்நடக்கை அந்தோ பெரும்பாதகத்தை யுண்டாக்கும் என்பது நிச்சயம். ஒரு காபி ஹோட்டலில் காப்பிக்கொட்டையோடு, அக் கொட்டைமே லிருக்கும் தோல், சிகைக்காய்வித்து, பொறியரிசி, முழுக்கோதுமை, யிவற்றையும் கருக வறுத்துப் பொடிசெய்து சேர்க்கிறார்கள் என்பதை நிச்சயமா யறிவோம். உணவுப் பொருள்களில் இப்படிச் செய்வோரைத் தண்டிக்கத் துரைத்தனத்தார் சோதனை யுத்தியோகஸ்தர்களை ஏற்படுத்தா திருப்பது ஓர் பெருங்குறை என்றே கூறலாகும்.

எவன் தன் பெருமையைத் தானே புகழ்ந்து கொள்கிறானே, எவன் தனக்கில்லாத பெருமையைக் கல்பித்து கூறிக்கொள்கிறானே இவர்களெல்

லாம் தங்களுக்கு உண்மையிலுள்ள கௌரவத்தையும் கட்டாயம் போக்கிக் கொள்வார்கள் என்பது சத்தியம். ஒரு வர்த்தகன் தன் சரக்கில் உள்ள உண்மையான குணங்களை யெடுத்துக் கூறவேண்டியதே. ஆனால் கண் மூடித்தனமாய் சற்றுமில்லாத குணங்களைக் கற்பித்துக் கூறல் மிக்க இழிவான நடக்கையே யாகும்.

கல்வியாளர் என்று கருதப்படுவோரிற் சிலரே தான் என்ற அகங்காரத்தால், நாம் எழுதியதற்கு இணையானது எங்குமில்லை யென்றும், இணையற்றதென்றும் கூறிக்கொள்கிறார்க ளென்றால் மற்றபேர்களைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ. சாமானிய அறிவுடைய எவனும், நம்மினுங் கற்றோர் அனேகர் இருப்பார்கள் என்று உணர்வான். அப்படி யிருக்க இவர்கள் இவ்வாறு தம்மைத்தாமே புகழ்ந்து கொள்வது கேவலம் அறிவின்மை யென்பது வேறென்னென்று கூறுவாம். நமது நாட்டார் இவ்விழிகுணங்களை விட்டொழிக்குமாறு பரம்பொருளாகிய கடவுளே யருள் புரியவேண்டுமாய்ப் பிரார்த்திப்போமாக.

பத்திரிகாசிரியர்.

பெண் கல்வி

சென்றபத்து, பதினைந்து ஆண்டுகளுக்குமுன் இருந்ததை விட இப்பொழுது தமிழ்நாட்டில் பெண்கல்வி அதிகம் பரவி இருந்தபோதிலும் "பானை சுரண்டும் பெண்களுக்குப் படிப்பு ஏன்?" என்பாரும் இல்லாமற் போகவில்லை. அன்னார் காலதேச வர்த்தமானம் தெரியாது பிதற்றுகிறார்க ளென்பது வெளிப்படை. நமது பெண்மக்களுக்குப் பொறுமை, அமைதி, கஷ்டங்களைச் சகித்தல், நிதானம், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு முதலிய பல அரிய குணங்கள் இயற்கையாகவே அமையப் பெற்றிருக்கின்றன. (தற்காலத்தில் இவ்வரிய குணங்கள் அருகிவருவதைக் காணும் எவரும் வருந்தாமலிரார்.) நமது முன்னோர்களில், ஆடவரும் பெண்டிரும் கல்வியில் தேர்ச்சி பெற்றிருந்தார்கள் என்பதற்குப் பல அத்தாட்சிகள் இருக்கின்றன. பிற்காலங்களில் ஏற்பட்ட அரசாங்க மாறுபாட்டால், கற்பையே ஆபரணமாகக் கொண்ட நமது பெண்மணிகள் வீட்டைவிட்டு வெளிவருவதே இயலாத காரியமாய் இருந்த காரணத்தினாலேயே பெண்கல்வி பாழ்பட்டது என்னலாம். பெண்மக்கள் முற்காலத்தில் கல்வியில் அதிகம் தேர்ச்சி பெற்றிருந்தார்கள் என்பதற்கும் பல அத்தாட்சிகள் இருக்கின்றன.

தற்காலத்தில் பெண்மக்கள் கல்வி, கடையாயிருந்தபோதிலும், "குலவித்தை கல்லாமற் பாதி" என்ற பழமொழிக்கிணங்க அவர்கள் இயற்கை காட்டாமல் போகவில்லை. இராமாயணத்தில் சீதை அசோகவனத்திலிருந்து புலம்புவதை கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பர் என்ன அருமையாக வர்ணித்து இருக்கிறார், அதைவாசிக்கும் பொழுதே மனம் உருகுகிறதென்றும், இன்னும் இதுபோன்ற பல அறிஞர்கள் பாடியபாக்களை எடுத்துக்காட்டி பலர் அக்கவிஞர்களைப் புகழ்வதையும் நாம் பலமுறைகேட்டிருக்கிறோம். இவ்விதப் புகழ்ச்சிக்கு நமது பெண்மக்கள் ஒவ்வொருவரும் உரியவர்க ளென்பது மிகையாகாது. செய்யுள்களில் வெண்பா, விருத்தம், அகவல், கண்ணிகள் எனப் பலவித முண்டு. நமது பெண்கள் சொல்லும் ஒப்பாரி, கண்ணிகளாக இருக்கலாமென நினைக்கிறோம். ஒப்பாரிசொல்லுவதில் தென்

பகுதியார் வெகுசமர்த்தர். எதுகை, மோனை முதலியவைகள் மாறுபடாமல் நல்ல அர்த்தத்தோடு கேட்பவர் மனம் கல்லாயினும் உருகும்படிச் சொல்லுவதை யாவருமறிவர். இச்சுயம்பாடும் அரியகுணம் இயற்கையிலேயே அவர்களுக்கு அமையப்பெற்றிருந்தும் எழுதப்படிக்கத் தெரிந்தபெண்கள் ஒப்பாரி சொல்லுவதற்கு மிகவும் உதவிதரக்கூடிய நல்லதங்காள் கதை, புலந்திரன் களவுமாலை, அல்லியரசாணிமாலை, போன்ற புத்தகங்களைப் படித்துத் தங்கள் இயற்கையை விருத்திபண்ணிக் கொள்ளுகிறார்கள். ஒரு இளங்கைம்பெண் ஒப்பாரி சொல்லும் சிறப்பைக்கண்டு ஒரு பிரசித்திபெற்ற கவிஞர் தனக்குள்ளேயே மானங்கொண்டு அவ்வூரைவிட்டே அகன்று போய்விட்டதாக ஒரு கதையுண்டு. ஆனதால் சகோதரிகளே!

உங்களுக்கு இயற்கையில் அமைந்திருக்கும் அரியகுணங்களை நீங்கள் அறியாது வீணே காலத்தைக் கழிக்கிறீர்கள். உங்கள் இயற்கையை நல்ல வழியில் செல்லச்செய்து உங்களுக்கும், உங்கள் தேசத்திற்கும் பெருமையைக் கொடுங்கள். அண்டை அயலாருடன் பேசி வீணே காலங்கழிப்பதால் பல இன்னல்கள் விளைவது உங்களுக்குத் தெரியும். வீணேகழிக்கப்படும் ஒவ்வொரு நிமிஷமும் இனி எக்காலமும் கிடைத்தற்கரிய முத்து என நினையுங்கள். ஒப்பாரி சொல்லுவதில் கருத்துகொண்டு அதற்கு வேண்டிய புத்தகங்களைப் படிப்பதை விடுத்துக் குறள், நாலடியார், திருவிளையாடற் புராணம், பாரதம், இன்னும் இதுபோன்ற புராண இதிகாசங்களை ஊக்கங்கொண்டு படிப்பீர்களேல் பக்தி முதலிய நமது முன்னோர்களின் அரிய குணங்களை அடைவதோடு நமது மூதாதை ஒளவைப்பிராட்டியாரின் சந்ததியார் என்று எவரும் சொல்லும்படி நீங்கள் ஒவ்வொருவரும் சுயம் பாடக் கூடிய சக்தியைப் பெறுவீர்கள் என்பது நிச்சயம். அவ்விதமே அகண்ட சச்சிதானந்த சொரூபராகிய எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவாராக.

க. சுப்பிரமணியம்.
கம்பளை, சிலோன்.

குறிப்பு:—நமது நண்பர் கூறும் அரிய குணங்கள் நம்பெண்மணிகளுக்கு இயற்கையாகவே யமைந்திருப்பது உண்மை யெனினும், அந்தோ இக்காலத்தில் அவற்றைக் கெடுக்கப் பலதூண்டுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒப்பாரியிடுவது அவர்கள் இயற்கைக் குணமேயாயினும், அதைவிட அவர்களுக்கு மிக்க கெடுதியை விளைவிக்கத்தக்க பலவிஷயங்களைச் சற்றும் முன்யோசனையில்லாப் பெற்றோர் முதலியவர்களே கற்பித்து விடுகிறார்கள். இவர்கள் பெண்களுக்குக் கல்வி கற்பிக்கிறோம் என்று கருதிக்கொண்டு அவர்கள் குணங்களையும் நடக்கைகளையும் கெடுத்துவிடத்தக்க பாட்டுகளையே ஆரம்பக்கல்வியாகக் கற்பிக்கிறார்கள். சங்கீதம் கற்கத் தகுந்ததேயாகிலும் எத்தகைய பாட்டுகள் நம்மக்களுக்குத் தகுதியானதென்பதைக் கவனிக்காமலே தில்லாலே வர்ணமெட்டுகளாகிய நாடகப்பாட்டுகளே முதலில் கற்பிக்கப் படுகின்றன. முதல்பாடம், இரண்டாம்பாடம் கூட சரியாய் வாசிக்கத்தெரியாத சிறுபெண்கள் தாராளமாய அபிநயனங்களுடன் இத்தகைய ஆபாசப்பாட்டுகளைப் பாடுவதை எங்கும் காணலாம். அந்தோ இவர்கள் கல்வி முடிவில் இவர்களுக்கு எத்தகைய பயனை யுண்டாக்கும், இவர்களை என்னகெதிக்கு ஆளாக்குமென்பதை அறிவாளிகளே சிந்தித்துப் பார்க்கலாம். இதைப்பற்றி பின்னால் சற்று விரிவாய் எழுதப்படுமாதலால் ஈண்டு இவ்வளவோடு நிறுத்துகிறோம்.

பத்திரிகாசிரியர்.

ஒழுக்கம்

ஒழுக்கம் ஒழுகு என்னும் தன்வினையினின்று பிறந்த பண்புப் பெயர்ச் சொல். ஒழுகு என்றால் நட, நடந்துகொள் என்பதுபொருள். ஆகவே, ஒழுக்கம் என்ற சொல்லுக்கு, நடக்கை அல்லது நடத்தை என்று அர்த்தங் கொள்ளலாம். இனி, ஒழுக்கம் என்பது நாம் இவ்வுலகியலிலே நடந்து கொள்ள வேண்டிய ஒழுங்கு, முறை, கிரமம், வழி, நெறி, மார்க்கம் என்றறிய வேண்டும். முறை, ஒழுங்கு, கிரமம், வழி, நெறி, மார்க்கம் என்பன ஒருபொருட்சொற்கள்.

ஒழுக்கம் என்பது சாதாரணமாய் நல்லொழுக்கத்தையே குறிக்கும். நாம் எப்பொழுது ஒழுக்கத்தை, அதாவது நல்லொழுக்கத்தை, நல்வழியை நன்னெறியை, சன்மார்க்கத்தை அனுசரிக்கவேண்டு மென்று கொள்ளுகிறோமோ அப்பொழுதே அதன் மாறான ஒழுக்கத்தை அதாவது தீயொழுக்கத்தை அறவே விட்டு விலகவேண்டும் என்பது வருவிக்கப்படுவதாம்.

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் - என்றும் இடும்பை தரும்" என்றார் செந்நாப் போதாரும்.

இவ்வுலகிலே, கடவுளால் படைக்கப்பட்ட எறும்பு முதல் சிறிய பிராணியி லிருந்து யானையீறாகவுள்ள பெரிய பிராணிவரையில் அடங்கிய சகல ஜீவஜெந்துக்களும் விரும்புவது இன்பம், வெறுப்பது துன்பம்; இஃது ஒவ்வொரு பிராணியினிடத்திலும் இயற்கையா யமைந்துள்ள குணம். ஆனாலும், மனிதனொருவனே இன்பம் அதன் சாதனம், துன்பம் அதன் சாதனம் இவற்றை முறையே பகுத்தறிந்து கொள்ளத்தக்க கரணங்களைப் பெற்றிருக்கிறான். ஆகையால், துக்கத்தையும் அதன் சாதனத்தையும் விலக்கி, ஆனந்தத்தையும் அதன் சாதனத்தையும் அடையமுயலுகிறான். இவ்வித நிலைமையில் அநுசரணையாக வழி காட்டுவதற்கே வேதாகமங்கள் நமக்குக் கடவுளா லருளப்பட்டிருக்கின்றன.

ஆகவே, துக்க நிவர்த்தியும் ஆனந்தப் பிராப்தியும் அடைய விரும்புவோன் வேதாகமங்களைக் கற்கவேண்டும். அதோடு அமையாமல் பிறர் வாய்க் கேட்கவும் வேண்டும். அதோடும் அமையாமல் அவற்றினுண் பொருள்களைச் செவ்வனே தெரிந்து அதன்படி நடக்க (ஒழுக)வும் வேண்டும். இதேகருத்தை ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரும் வெளியிட்டிருக்கிறார். எனவே, கல்வி கேள்வி அறிவு ஒழுக்கங்களிற் கைவந்தவொருவனே சிறந்தவன், பெரியோன்!

வயதின் எண்ணிக்கை மிகுதியினாலேயே ஒருவன் பெரியவனாக மாட்டான். சம்பத்தின் பெருக்கினாலேயே ஒருவன் பெரியவனல்ல. உயர்குடிப் பிறப்பினால் மாத்திரம் ஒருவனைப் பெரியோன் என்று சொல்வதற்கில்லை. ஆனால் வயதி லிளைஞனா யிருந்தாலும், நித்திய தரித்திரனா யிருந்தாலும், கீழ்குடிப் பிறப்பாளனா யிருந்தாலும், கல்வி கேள்வி அறிவு ஒழுக்கங்களின் மிகுந்தவ னெவனோ அவனே பெரியோன், அறிவாளி.

ஆனால் நல்லொழுக்கத்தில் நடப்பவர்கள் இவ்வுலகத்திலே அதுபிசகி, தீயயொழுக்கத்திற் பிரவர்த்திப்பவர்களைப்போல் அவ்வளவு மிக்க ஊதியமும், சுகபோகங்களும் அனுபவிக்கக் காண்கிறோ மில்லையே யெனின், உலக விஷயங்களிலே நல்லொழுக்க முடையவன் சிறிது நஷ்டமும், சரீர கஷ்டமு முறுவது சகஜம் என்றாலும், நல்லொழுக்கம் தீயொழுக்கமிரண்

டும் முறையே புண்ணிய பாபங்களை விளைத்து அவற்றின் பயனாக என்று முள்ள மோக்ஷ நரகப்பிராப்திகளைச் சித்திக்கச் செய்வதென்றால், இவ்வுலக காரியங்களிலே உயிர் நீக்க வரினும் அப்பொழுதும் நல்லொழுக்கம் பிறழ்தல் கூடாது.

“ ஒழுக்கம் விழுப்பந்தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும். ” என்றார் நாயனாரும்.

நல்லொழுக்கம் மோக்ஷத்துக்கும், தீயொழுக்கம் நரகத்துக்கும் வழி கொண்டு செல்லும் மார்க்கங்களாக வைத்துக்கொண்டு, அவற்றின் அமைப்புக்களை ஒத்திட்டுப் பார்த்தால், நல்லொழுக்க நெறியானது ஆரம்பத்திலே மிகவும் ஒடுங்கி நெருக்கமுள்ளதாயும், கரடு முரடானதாயும், தன்னில் புகுந்து செல்வோன் தடுக்குண்டு விழாதபடி அதிக ஜாக்கிரதை எடுத்துக் கொள்ள வேண்டியதாயு மிருக்கும்படி அவ்வளவு கேடுள்ளதாயிருக்கிறது தீயொழுக்க மார்க்கமோ ஆரம்பத்தில் மிகவு மகன்று விசாலித்ததாயும். அடிவைத்து நடக்க அதிக மெதுவானதாயு மிருக்கும்படி செவ்வனே செப்பனிட்டதா யிருக்கிறது. இவைகள் தோற்ற மாத்திரத்திலே தான்.

ஆனால் உட்புகுந்து செல்லச் செல்ல, அவைகள் தம்மில் ஒன்றற்கொன்று தன்மைகளை மாற்றிக் கொண்டவைகளாகி, அவைகளின் முடிபிடங்கள் முறையே மோக்ஷம் நரகம் என்பனவாக விருக்கின்றன. ஆகவே, நாம் ஆரம்பத்தில் கஷ்டமாயிருக்கிற நெருக்கமான மார்க்கத்தையே பின்பற்றினால் என்றும் அழிதலில்லா நித்தியானந்த வாழ்வையடையலாம்!

நாம் இம்மாயவுலகில் ஐம்புலன்களின் சேஷ்டையால் விரும்பும் ஒவ்வொன்றும் அநித்தியமானதே. காண்பன வெல்லாம் வெறுந்தோற்றமே! சுகிப்பதெல்லாம் அற்ப போகமே. விரும்பி வயிற்றில் நிறப்புவதெல்லாம் மலமாயும் குறைந்தும் போகக் காண்கிறோம். எனவே, புலன்களின் வழி நாம் செல்லாது, சன்மார்க்க ஒழுக்கத்தினுண்மை கண்டு அதன்படி ஒழுகினோற்றான் கடவுளின் திருவருள் சித்திக்கப்பெற்று, அதனால் என்றும் பிறப்பிறப் பில்லாத பேரின்ப நிலையடையலாம், நித்தியானந்த சுகம் பெறலாம் என்று ஆன்றோர் கூறியுளர்.

வாயால் மாத்திரம் பகவத் திருநாமங்களை அல்லும் பகலும் இடைவிடாது ஸ்மரித்துக்கொண்டு நடவடிக்கையில் ஒழுங்கீனர்களா யிருப்போமானால் ஒருவிதத்திலும் கடவுளின் திருவருளுக்குப் பாத்திரராக மாட்டோம். உதாரணமாக:—

ஒரு சிறுவன், தெருவில் சுயேச்சையாய்ப் போய்க் கொண்டிருக்கிற ஓர் நாயைப்பார்த்து அதை ச்சு! ச்சு! என்ற சப்தத்தாற் கூப்பிடுகிறான். உடனே அது, பையன் ஏதோ பட்சம் காட்டுகிறா னென்று அவனை நாடிச் செல்ல வாரம்பிக்கிறது. ஆனால் இவன் முன்னைய தொனியை இடைவிடாது செய்து கொண்டே, கீழ்க்குனிந்து கல்லைக்கையி லெடுக்கிறான். உடனே அந்நாயானது சிறுவனுடைய வாயளவிலிருந்த பட்சத்தை மறந்து செய்கையைக் கண்டு ஓட்டம்பிடிக்கிறது. இனிப்பையன் எவ்வளவு உறத்த சத்தம்செய்து கூப்பிட்டாலும், நாய் திரும்பி வருகிறதில்லை. நம்பக்தியும் நடக்கையும் கடவுள் முன்னிலையில் இதைப் போலவே இருக்கின்றன.

முற் பிறப்பில் நாம் நடந்துகொண்ட ஒழுக்கத்துக்குத் தக்க நன்மை தீமைகளை அனுபவிப்ப தற்காக இச்சரீரம் நமக்குக் கொடுக்கப்பட் டிருக்கிறது என்பது,

"வினைப்போக மேயொரு தேகங் கண்டாய் வினைதா னொழிந்தால்
தினைப் போதளவு நில்லாது கண்டாய், சிவன் பாதநினை
நினைப்போரை மேவி நினையாரை நீங்கி நன்னெறியி னின்று
னூனைப்போ லொருவ ருண்டோ மனமேயெனக் குற்றவரே!"

என்னுஞ் செய்யுளால் விளங்கும். ஆதலால், நம் மனம் தீயவொழுக்கங் களிற் பிரவர்த்திக்காதபடி அதை யொருவழிப்படுத்த லவசியம். நம்மனதை எவ்வளவுக் கெவ்வளவாய் அடக்கி யாள்கிறோமோ, அவ்வளவுக் கவ்வள வாக அது நம்மை நல்லொழுக்கத்தி லீர்த்துச்சென்று அவ்வொழுக்கத்தின் பயனாகிய நித்தியாநந்த 'மோக்ஷத்தில் சேர்ப்பிக்கு மென்பது திண்ணம், திண்ணம்! சுபம்! C. இரத்தினவேலு, மேச்சேரி.

ஈகை

ஈகையென்பது, வறியவராய் வந்து ஒன்றை இரப்போர்க்குக் கொடுத் தலாம். இதுபற்றியே திருவள்ளுவரும், "வறியார்க்கொன் றீவதே ஈகை மற் றெல்லாம்-குறியெதிர்ப்பை நீர துடைத்து" என்று கூறியிருக்கின்றனர்.

உலகத்திலே தரித்திரர்கள், தங்களுக்குரிய பெருமை அனைத்தையும் ஒழித்துத் தங்களது திரேகம் குன்றி, முகத்தில் மிகப் பரிதாபம் விளங்கப் பல்லைக் காட்டி, இல்லாதவரென்று தம்மைத் தாழ்த்திக்கூறி, உள்ளவர் முன்னே வந்து தம்குறை கூறுங்கால், அத்தன்மை யுடையவர்களுக்கு பொருளுடையார் இல்லை என்று உரைப்பது மிகவும் கொடிது; அவர்களை எவ்வளவாவது இரக்கம் இல்லாதவர்க ளென்றே சொல்லவேண்டும்.

உலகத்திலே பொருள் உள்ளவர்களை, இல்லா தவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டே கடவுள் உண்டாக்கி யிருக்கின்றன ரென்றும், அப் படியிருந்தும் ஈகையில்லார் கேடடைவ ரென்றும், தினந்தோறும் ஆகாரம் சமைத்துச் சாப்பிடவழியில்லாமல் வறுமையுற்றுத் திரிபவர்க ளனைவரும் முன் பிறப்பில், ஈகைக்குண மில்லாதிருந்தவர்க ளென்றும் சாஸ்திரங்கள் கூறுவதை நாம் அறிந்திருக்கின்றோம்; அங்ஙனமறிந்தும் ஈகைக்குண மில்லாதிருப்பது எவ்வளவு பேதைமை?

பொருளை மிகப் பிரயாசையுடனே வருந்திச் சம்பாதித்துப் பிறர்க்குத வாமல் குவித்து வைத்திருப்பவர்கள், மேலும் மேலும் அப்பொருளைத் திரு டர்கள் கொண்டுபோய் விடுவார்களென்ற அச்சத்தை விருத்திசெய்து கொள்ளுகிறவர்க ளாவார்களே யொழிய, வேறொரு பயனையும் அடை யார்கள்.

அநேக தனவந்தர் செல்வவான்களையும், பெரிய மனிதர்களையும் தங் கள் பொருளால் அதிகமாக உபசரித்து, வறியவர்களாய்ப் பசியோடு ஆகார முண்ண வேண்டுமென்று ஆவலோடு வருபவர்களை வாருங்களென்று கூட அழைக்காம லிருக்கிறார்கள். இது எவ்வளவு மதியீனம்?

இவ்வாறு செல்வவான்களுக்குச் செய்யும் உபசரணையில் பாதியாவது ஏழைகளா யுள்ளவர்களுக்குச் செய்தால் எவ்வளவோ கீர்த்தியும் புண்ணிய மும் உண்டாகும். ஏழைகளுக்கு முகமலர்ந்து அவர்கள் விரும்பியதை அன்புடனே கொடுத்து உதவி செய்யவேண்டும். அங்ஙனம் செய்வதிலும், நாம் உலகத்தில் நெடுநாள் ஜீவித்திருப்பது அனித்தியமாய் இருப்பதினாலே,

"எப்போதாயினும் கூற்றுவன் வருவான்
அப்போதந்தக் கூற்றுவன் தன்னைப்
போற்றவும் போகான் * * *
அதனால்,
ஒன்றே செய்யவும் வேண்டும் ஒன்றும்
இன்றே செய்யவும் வேண்டும் இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும்."

என்று கபிலர் உரைத்ததை யுணர்ந்து, ஈகையென்னும் தருமத்தை நாம் விரைந்து செய்யவேண்டும், நற்காரியங்களை, 'நாளை நாளை' என்று கடத்திவிடாமல் அப்போதைக் கப்போதே விரைந்து செய்வதுதான் உசிதமாகும்.

ஆசை

புதிய விஷயங்களைக் காணுங்கால், அவைகளை நாம் அடையவேண்டும் என்று நமது மனதில் எழும் உணர்ச்சிக்கு ஆசையென்று பெயர். முன்பே நாம் அனுபவித்து ஸுகம் கொடுப்பவை என்று உணர்ந்திருந்த விஷயமாக இருந்து, நாம் முயன்றால் அது கிட்டத்தக்கது என்று தோன்றிவிட்டால் ஆசை அதிகரித்து நம்மை முயற்சிக்கும்படி தூண்டிவிடும். இதுவுமல்லாமல் ஒரு விஷயத்தை அனுபவித் தறியாவிடினும், பிறர் அதன் ஸுகம் கொடுக்கும் தன்மையை எடுத்துரைக்கக் கேட்டபொழுது இவ்வாசை ஓங்கி எழும். ஆகவே பொதுவாக ஆசை ஸுகவஸ்துக்களிடம் தானாகவே எழும். அந்த விஷயம் முதலில் ஸுகம் கொடுப்பதாக விருந்து பின்னர் துக்கத்தைக் கொடுப்பதாக இருப்பினும் அதன்மேலேயே கண் மூடத்தனமாக ஆசை பாய்ந்து செல்லும். இத்தகைய விஷயங்களுக்குக் கெட்டவைகள் என்று பெயர். "தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயப்பவைகள்" நல்லவைகளே. இவைகளிடம் சாதாரணமாக ஆசை எளிதில் பாய்ந்தோடாது. இவைகளிடம் ஆசை செல்லவேண்டுமாகில் பகுத்தறிவைத் தீட்டி கல்வியிலும், ஒழுக்கத்திலும் தேர்ச்சி அடைந்தால் தான் அது முடியும். எப்படி இருப்பினும் எல்லோரிடத்தினும் பொதுவாக நன்மையைக்கருதாது ஸுகத்தைமாத்திரம் கருதிக் கதித்தெழும் ஆசை இல்லாமற் போகாது. இதனால்தான் உலகில் ஒருவருக்குத் துக்கம் உண்டாவது. இம்மாதிரியான விஷய ஆசை இல்லாப் பெரியோர்கள் அநேக ஆயிரத்தில் ஒருவரேனும் இங்கு இல்லாமற் போகவில்லை. அவர்கள் நடவடிக்கைகளைப் பின்பற்றித்தான் நாம் எல்லோரும் ஆசையை அடக்க முயல்வது. அத்தகையோர் இல்லையென்ற திடஞானம் நமக்கு வந்துவிட்டால் ஆசையை அடக்க ஒருவரும் முயர்ச்சிக்காது, அது அஸாத்தியம் என்று மனங்குன்றி நிற்பர்.

"அதிக ஆசை அதிக நஷ்டம்" என்பது ஒரு பழமொழி. இது உலக விஷங்களைப் பற்றி நிற்கும். மனதில் விஷய ஆசை அதிகமாக எழுங்கால் நமது மனம் எருமை மாடு விழுந்து கலக்கும் குட்டையைப் போலாய்விடும். பகுத்தறிவு மழுங்கிவிடும். ஆசைப்படும் விஷயத்தை அடையவேண்டிய முயற்சிக்கு ஏற்ற மனோபலம், தேகபலம் முதலியன குன்றும். மேலும் தகாத காலத்தில் அவசரத்தில் தொடங்கிய விஷயம் கைகூடாமல் போய்விடும். ஆதலால் அதிக ஆசை அதிக நஷ்டத்தை ஏற்படுத்துமே யொழிய லாபத்தைக் கொடுக்காது. இதற்கே "காணியாசை கோணிகேடு" என்று

கூறப்பட்டது. மேலும் உலக விஷய ஆசை வரவரக் குறைந்துகொண்டு வந்தால் நமக்கு ஒருவித சுகம் ஏற்படும். மனம் கலங்காதிருக்கும். கிட்டாத விஷயங்களில் ஏற்படும் ஆசை வீண் மனஸ்தாபம்தான். கிட்டக் கூடிய விஷயங்களிலும் அதிக ஆசையிருப்பின், அவை ஒருதரம் தவறினல் மனத்தளர்ச்சி ஏற்பட்டு மறுமுயற்சி செய்யவேண்டிய வலிமை குறையும். ஆகவே எப்பொழுதும் ஆசையை மிதமிஞ்ச விடலாகாது. மேலும், அனுப வித்தால் ஆசை குறையும் என்பர் சிலர். விஷயங்கள் அநித்தியம், அவை கள் பூர்ண சுகத்தைத்தரா, வரும் சுகமும் துக்கத்துடன் கலந்தேயிருக்கும். கிடைக்கும்முன் கிட்டவில்லையேஎன்ற துக்கம், கிடைத்தபின் தக்கவேண் டுமே என்ற அச்சம் அதிகமாகிவிட்டால் வெறுப்பு, ஆகிய இவைகளால் விஷயசுகம் பூரணசுகமாவதில்லை. ஆதலால் விஷயசுகங்களில் உள்ள ஆசை கேடுவிளைப்பதே யொழிய நல்லது அன்று என்ற பகுத்தறிவோடு விஷய சுகங்களை அனுபவித்து வந்தால்தான் ஆசை குறைந்துகொண்டேவரும். இல்லாவிடில் நெய்விடவிட அக்னிவளர்வதுபோல அனுபவத்தால் ஆசையும், மனச்சஞ்சலமும் அதிகரிக்கும். எவ்வளவிருந்தும் ஆசை அடங்காது. இதற்கு யயாதி கதையே (வாசிட்டம்) தகுந்த உதாரணம். ஆதலால் பகுத் தறிவால் ஆசையைக் குறைக்க முயன்றால் மனம் அடங்கி சாந்தி உண்டா கும். இதுபற்றியே தாயுமானவரும் "ஆசைக்கோ ரளவில்லை...ஆதலால் உள்ளதே போதும் நான் நான் எனக் குளறியே ஒன்றைவிட் டொன்று பற்றி பாசாடவிக்குளே வீழாமல் மனதற்ற பரிசுத்த நிலையை அருள்வாய்" என்று கூறினர்.

S. ரங்கப்பனயக்கர், டீச்சர்,
போர்டுஸ்கூல், காளப்பட்டி.
கோயமுத்தூர் தாலூக்கா.

ஓர் அதிசயக் கணக்கு

நண்பர்களே,

ஆனந்த போதினியின் 4-ம் தொகுதியின் 232-ம் பக்கத்தில் வரைந்தி ருக்கும் அதிசயக் கணக்கைப் பார்த்திருப்பீர்கள். அச்சக்கரத்திலுள்ள இல க்கணங்களைக் கூட்டுவதினல் வரும் மொத்தம், 50. ஆனல் நாம் நினைக்கும், 17க்கு மேற்பட்ட, எத்தொகையும் மொத்தமாக வரும்படி அதற்கு வேண் டிய இலக்கங்களை அடைக்கும் விதமாவது:—

1-ம் சக்கரம்

ப	க	வ	த
பா	கா	வா	தா
பி	கி	வி	தி
பீ	கீ	வீ	தீ

2-ம் சக்கரம்

47	1	45	7
44	8	46	2
5	43	3	49
4	48	6	42

1. வீட்டின் பெயர்—1-ம் சக்கிரத்தின் ஒவ்வொரு வீட்டிலும் இருக் கும் அட்சரத்தையே அந்த வீட்டின் பெயராகக் கொள்ளுக

2. பொது விதி—2-ம் சக்கரத்தின், க, தா, வி, பீ, பி, வீ, த, கா என்ற வீடுகளில் முறையே 1, 2, 3, 4, 5, 6, 7, 8 என்ற இலக்கங்களை அடைக்குக.

3. நினைத்த தோகை மோத்தமாக வரும்படி அடைத்தல்—பொது விதிப்படி அடைத்தபின், 2-ம் சக்கரத்தின் எஞ்சிய, தி, கீ, ப, வா, வ, பா, கி, தீ, என்ற வீடுகளில், இங்கே நினைத்த தொகையாகிய 100-ஐ கீழ்க்காட்டியபடி இரண்டால் வகுத்து வந்த ஈவிலிருந்து ஒவ்வொன்றைக் கழித்து, வருஞ் சேடத்தை முறையே அடைக்குக.

(100 ÷ 2=50, 50—1=49; 49-1= இப்படியே.)

4. இங ஙனம் 2-ம் சக்கரத்தில் காட்டியபடி 16 வீடுகளிலும் அடைத்த பின், நேராகக், குறுக்காக, மூலைக்கு மூலையாக, எந்த நான்கு வீடுகளிலுள்ள எண்களைக் கூட்டினும் 100 தான் மொத்தமாகவரும்.

5. 33-க்கு மேற்பட்ட தொகையானுல் ஒரு முறை அடைத்த எண்ணைத் திரும்ப அடைக்க வேண்டிய அவசியம் நேராது.

6. 17-க்கு மேற்கீழ்ப்பட்ட தொகைகளையே இவ்வாறு முழு எண்களால் (பின்ன) அடைக்கலாகும்.

சி. கந்தையா, மன்னூர்.

நித்தியவிதி—பேரிரவு

(174-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்விஷயத்தில் அபிப்பிராய பேதமுளது. அதனைச் சிறிது ஆராய்ச்சி செய்வாமென முன்னர்க் கூறிப்போந்தாம். இவ்வபிப்பிராய பேதம் தேச வேறுபாட்டா லுண்டாயது. அவ்வேறுபாடு யாதோ வெனிற் சீதோஷ்ண நூனாதிக்கம் பற்றி யேற்பட்டது. சீதள மிகுந்த தேசத்துக்கும் உஷ்ண மிகுந்த தேசத்துக்கும் வேறுபாடு மிகுதியுமுண்டு. சீதள தேசத்திலுற் பத்தியாகும் சராசரப் பொருள்கள் யாவையும் சீக்கிரத்தில் பரிபாக மடையா. அவைகட்கு அதிககாலம்வேண்டும். உஷ்ணதேசத்திலோயாவும் வெகுசீக்கிரத்திற் பரிபாகப் பட்டுவிடும். மரம் செடி கொடிகள் யாவும் சீக்கிரத்திற் பூத்துக் காய்த்துப் பழுக்கும். சீக்கிரத்தில் இலயத்தையுமடையும். சீதள தேசத்துப் பொருள் நாடசென்றே பரிபாகப் படுதலால் நெடுங்கால மழியாமலிருக்கும். நிற்க, நாம் எடுத்துக் கொண்ட விஷயமோ மனிதருடைய சரீரசம்பந்தமானதால் மற்றதை நிறுத்தித் தொடங்கிய விஷயத்தைக் கவனிப்போம்.

நாம் வசிக்கின்ற இத்தேசத்தில் பித்தவிருத்தியும் கபக்குறைவு முண்டு. ஏனென்றால் நமதுதேசம் விஷுவரேக்கைக்குச் சமீபத்திலுள்ளதாதலால் உஷ்ணம் மிகுதி. சீதளமிகுந்த தேசத்தில் பனி நிறைந்திருக்கும். ஆதலாலவர்கள் பிறந்ததுமுதல் உஷ்ணம் அதிகமில்லாமல் குளிர்ச்சியிலேயே பயின்று வருகின்றார்கள். ஆதலாற் சரீரவிருத்தி யிருந்தபோதிலும், வெளியிலுண்டாம் உஷ்ணத்தாலுண்டாகும் பரிபாகம் சீக்கிரத்திலுண்டாவதில்லை. உள்ளே ஜாடராக்கினியாலும் வெளியிற் சூரியனது உஷ்ணத்தாலுமே பரிபாகம் பெறுகிறது. உள் உஷ்ணம்மாத்திரம் உடையதேசத்திற்

காதல் மலிதலால், காலவிசேஷத்தால் உஷ்ணம் உட்புறமதிகரிக்கும். வெளிச்சூடோ தேசத்தைப் பொறுத்தது. ஆதலால் உஷ்ணமில்லாமல் சீதளம் மிகுந்திருக்குந் தேசத்தில் பெண்களுக்கு வெளிப்புற அவயங்கள் சீக்கிரத்தில் பரிபாக மடையா. திருஷ்டாந்தமாக வட பாகத்திலுள்ளவர்களுடைய சரீரம் சீக்கிரத்தில் பரிபாக மடைவதில்லை. அவ் விடத்திற் சீதள மதிகமாதலால் அங்குள்ள பெண்களுக்கு மேற்றிசையார் போலவே வெளி அவயவங்கள் சீக்கிரம் பரி பூர்த்தி பெறுவதில்லை. இப்பாகத்திலோ உஷ்ணம் மிகுந்திருத்தலால் உள்ளும் புறமும் ஒரேதன்மைத் தாய்ப் பரிபாகப்பட்டு அவயவங்களெல்லாம் சீக்கிரத்தில் பூர்த்தி பெறுகின்றன.

இப்பரிபாக காலத்தைக் கண்டுகொள்வதற்கு நமது முன்னோர்கள் ஒருவழி கூறி யிருக்கின்றனர். அதாவது ஜனன காலத்தில் சிரசிலிருந்த சோணிதம் (உதரம்) பரிபாகமான போது கீழ்நோக்கி யிறங்கும். மனோவேக மென்ற ஒரு நாடியுளது. அந்நாடி வழியாகவே கீழ் நோக்கி யிறங்கும். அது செல்லும் வழியில் ரோம ரேகை யுண்டாகும். இச் சோணிதம் சிரசில் நிற்பதால்தான் பிறக்கும்போதே தலையில் மயிர் முளைத்திருக்கின்றது. அது கீழ் நோக்கிச் சென்றதற்கு அடையாளம் பெண்களுக்கு ஸ்தனமும் பிறகு கீழ் நோக்கி யுண்டாகும் ரோம ரேகையுமாம். ஆடவர்களுக்கு மீசை தாடியும் பிறகு மார்பில் ரோமோற்பத்தியுமேயாமென்று பெரியோர் கூறுவர். ஆடவர்கள் சரீரம் பரிபாக பூர்த்தியை யடைந்தாலும் முயற்சியானன்றி ரேதஸ் வெளிப்படாது. வெளிப்பட்டால் அது ஒரு வகை ரோகமாகும். பெண்களுக்கு அதற்கு மாறுபாடாக முயற்சியின்றித் தானாகவே வெளிப்படும். அதனையே ருதுகால மென்பர். அவர்களுக்கு அகாலத்தில் வெளிப்பட்டாலும், குறிப்பிட்ட காலத்தில் வெளிப்படாமல் தடைப்பட்டாலும் அது ரோகமேயாம். வெளி உஷ்ண மிகுதியான தேசத்துப் பெண்களுக்கு ஏக காலத்தில் உள்ளும் புறமுமாகிய அவயவங்கள் பரிபாக பூர்த்தியான பிறகே ருதுகாலமுண்டாகின்றது. சீதள தேசத்திலுள்ளவர்களுக்கோ உட்சூட்டினால் உள்ளவயவங்கள் பரிபாகப்பட்டுச் சோணிதம் வெளிப்படும். வெளிச் சூடின்மையால் புற அவயவங்கள் சீக்கிரத்தில் பரிபாக மாகா. ஏனெனில் வெளி உஷ்ணமின்றி உள் உஷ்ணத்தினாலேயே மேற்புறமும் பரிபாகம் பெறவேண்டு மாதலால் சோணிதம் வெளிப்பட்டபின் நெடுநாட்கள் சென்ற பின்னரே வெளி அவயவங்கள் பூர்த்தி பெறும். ஆதலால் சீதள தேசத்துப் பெண்கள் ருதுவானாலும் புத்திரோற் பத்தி காரணமான நிஷேகத்துக்குச் சீக்கிரத்தில் அருகர்களாகார்கள் நமதுதேசத்திலோ அவ்வாறன்றி இருபுறமும் பரிபாகப்பட்ட பின்னரே ருது நேரிடுமாதலால் சீக்கிரத்திலேயே நிஷேகத்துக் கருகராவார்க ளென்பது நமது முன்னோர்கள் கருத்து. இவ்வேறுபாடுகளை யுணராமல் மேற்றிசையாரைப்போலவே ருதுவான நெடுங்காலத்துக்குப் பிறகே நிஷேகம் செய்யவேண்டு மென்பது உசிதமாகா தென்க.

காலதேச வியல்பானன்றி ஆகார வேற்றுமையாலும் சரீர நிலைமை வேறுபடும். மரக் கறிகளை உண்டு ஜீவிப்பவர்களுக்குச் சரீர மாம்சம் சீக்கிரத்தில் பரிபாகப் படும். பக்குவ மாம்ச போஜனம் செய்பவருக்கு அவ்வளவு சீக்கிரத்தில் பரிபாக மெய்தாது. அபக்குவ மாம்ச முண்பவருக்கு நெடுங்காலஞ் செல்லும். இலை கனி காய் முதலியவை இயற்கையில் சீக்கிரமாய்ப் பரிபாகமாய் மாம்சமாக மாறும். மாம்ச போஜனம் செய்பவர்களுக்கு அங்ஙன மாகாது. ஒரு சரீரத்தில் பரிபாகப் பட்ட மாம்சம் மற்றொரு

சரீரத்தில் பரிபாகப்பட்டு மாம்சமாக மாறுவதற்கு வெகு காலம் செல்லும். அதுவே அபக்குவமாய்ச் சரீர உஷ்ணத்தாலேயே பரிபாகப்பட வேண்டுமானால் அதை விட அதிக காலம் செல்லுமென்பது சொல்ல வேண்டுவதில்லை. ஆதலாற்றான் தானியங்களைப் புசிப்போர்க்குப் பரிபாகம் சீக்கிரமாமென்றும், பக்குவ மாம்சம் புசிப்போர்க்கு அதைவிட அதிக காலம் வேண்டுமென்றும், அபக்குவ மாம்சம் புசிப்போர்க்கு நெடுங்காலம் வேண்டுமென்றும் சரீரவியல் கூறும் வைத்திய நூல்கள் கூறுகின்றன.

இத்தேசத்துப் பெண்களுக்கு சூரியோஷ்ணமே யன்றிப் பாகாதிகாரம் விதித்திருப்பதால் அக்கினியின் உஷ்ணமும் கூடிச் சரீரத்தைச் சீக்கிரத்தில் பக்குவப் படுத்தும். பிராமண ஜாதிப் பெண்களுக்குப் பாகம் செய்யுந் தொழிலன்றியும் அக்கினி ஹோத்திரம் ஔபாசனம் முதலிய அக்கினி காரியமும் ஏற்பட்டிருப்பதால் அவர்கள் சரீரம் பரிபாகப் படுமென்பது கூற வேண்டுவதில்லை. இத் தேசத்தில் தானியங்களை மிகுதி யாகவும் பக்குவ மாம்சம் சிறிதும் புசிப்போரே மிகுதி. மேல் நாட்டார் அபக்குவ மாம்சம் அதிகமாய்ப் புசிப்பார்கள். ஆதலால் அவர்களுக்குச் சரீரம் பரிபாகப் பட வெகு நாளாகும். நமது தேசத்தாருக்கு அவ்வாறன்றித் தானியங்களையே மிகுதியாகப் புசிப்பதால் சரீரம் சீக்கிரத்தில் பரிபாகப் படுமென்று கொள்ள வேண்டும். இதனை மறுத்துத் தேசாந்தரங்களுக்குச் சமானமாக இத்தேசத்தையும் கொண்டு, அந்நிய நாட்டார் கொள்கைகளையே நாமும் அனுசரிக்க வேண்டுமென்பது விபரீதமேயாமென்க. அது அறிவாளிகள் செய்கையு மாகாது.

சீக்கிரத்தில் எவ்வனம் பரிபூர்த்தி யானால் அந்த எவ்வனமும் சீக்கிரத்திலேயே ஒழியும். அதனால்தான் நமது தேசத்துப் பெண்களுக்கு நாற்பது நாற்பத்தைந்து வயதுக்குமேற் புத்திரோற் பத்தி யுண்டாவதில்லை. மேல் நாட்டில் அவ்வாறின்றி அபர வயதிலும் புத்திரோற்பத்தி யாகின்றது. இதில் அறியத் தக்கது யாதெனில் குளிர்ச்சி மிகுதியான தேசங்களில் சரீர திடமும் ஆயுசு அதிகமும் உண்டா யிருக்கும். எவ்வகைப் பொருள்களும் குளிர்ச்சியாலிறுகும்; உஷ்ணத்தாலிளகும். ஆதலால் குளிர்ச்சியான தேசத்தில் வசிப்பவர்களுக்கு எவ்வனம் பூர்த்தியாக நாளாகின்றமையால் அந்த எவ்வனம் நெடுங்காலம் நீடித்திருக்கும். எவ்வனம் நீடித்திருப்பதால் மூப்பு அதன் பின்னரே உண்டாம். இதனால் அவர்களுக்கு ஆயுசும் நீடித்திருக்கும். உஷ்ண தேசத்திலோ அதற்கு மாறாகவே யிருக்கும். மேலே குறித்த காரணங்களால் நமது தேசத்து ஆடவர் மகளிர்களுக்கு எவ்வனபூர்த்திசீக்கிரமேயுண்டாகு மென்றே தோன்றுகின்றதல்லவா? அதனால்தான் நம் நாட்டுப் பெண்களுக்கு மங்கைப் பருவமாகிய பன்னிரண்டாம் வயதுக்குப் பின் பதின் மூன்றாம் வயதிலேயே எவ்வனாரம்பமாமென்றும், ஆடவர்களுக்குக் கௌமார பர்வமாகிய பதினாறாம்வயது முடிந்ததும் எவ்வனபர்வம் தொடங்குமென்றும் நமது முன்னோர்கள் ஊகித்தறிந்து எழுதி வைத்திருக்கிறார்கள். அவர்கள் எழுதி வைத்திருக்கிற விஷயங்களை யெழுத வென்றால் மிக்க விரியுமாதலால் இச் சிறு நூலில் சுருக்கியே எழுதுகிறோம். கால தேசாசாராதிகளினால் சரீராபிவிர்த்தியும்வேற்றுமைப் படுமென்பதும், அவ்வாறு வேறுபட்ட இயல்புள்ள இருதேசங்களையும் சமானமாகக்கொள்வது கூடாதென்பதும், அங்ஙனம் கொள்ளின் விபரீதப்பட்டு அபவாதமும் பழியும் பாவமும் நேரிடுமென்பதும், பதார்த்த குணவியல்பாலறிந்து தத்தம் தேசத்துப் பொருள்களுக்குரிய வியற்கையை யறிந்து

அதற்கியைய நடப்பதே புத்திமான்கள் செய்கையாகும் என்பதும், நமது முன்னோர்கள் நமது தேசவியல்பை யுணர்ந்தே அதற்குத் தக்கவாறு வியவஸ்தை செய்து தருந்த விதிகளையும் விதித்திருக்கின்றார்களென்பதும், அவ்விதிகளுக்கு மாறாக நடப்பது நமது தேசத்துக் கொவ்வாதென்பதும், பதினாறுவயதும் இருபது வயதுமுள்ள மனைவிக்கும் புருடனுக்கும் உற்பத்தியாகும் பிரஜைகள் திடகாத்திரமுடையனவாய் நீடித்த ஆயுளும் பெற்றிருக்குமென்று மேலே எடுத்துக் காட்டிய வைத்திய நூல்களின் விதியையே நாம் அனுசரிக்கவேண்டுமென்பதும் இதனால் பெறவைத்து இத்துடன்பேரிரவின் பிரகரணத்தைப் பூர்த்திசெய்கின்றோம். இனி இவ்வாறு கூறப்பட்ட தம்பதிகளால் அனுசரிக்கப்படும் தர்மங்களையும் கிரகஸ்த தர்மத்தைத் துறந்திருப்பதாகிய துறவற தர்மத்தையும் சிறிது கூறுவோம்.

பேரிரவு முற்றும். (தொடரும்.)

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

ஆனந்தனின் வளர்ச்சியும், சந்தாநேயர்களின் கடமையும்

அருமைச் சோதரர்களே! இருமுறையாக நம்தேச முன்னேற்றத்திற்கு இன்றியமையாத சாதனமாகிய பிரதமக்கல்வியைப் பற்றியும் பிரதம உபாத்தியாயர்களது நிலைமையைப் பற்றியும், அன்னவர்கள் செய்யவேண்டுவனவற்றையும் என் சிற்றறிவுக் கெட்டியமட்டும் சிற்சில குறிப்புகள் கூறியுள்ளேன்.

தற்சமடமோ, நம் தாய்ப்பாஷையின் அபிவிருத்திக்காகவும், அறம், பொருள், இன்பம் இவைகளைச் சரியானவழியில் உபயோகிக்கவும், சரியை, கிரிகை, யோகம், ஞானம் ஆகியவைகளால் மோட்சபதவியடைந்து சதா இன்புற்று வாழவும் முன்வந்துழைக்கும் நமது ஆனந்தன் இன்னும் மென்மேலும் மேன்மைபெற் றெய்துவான் வேண்டி இன்னும் அநேகர் தங்கள் கரங்களில் வாங்கி மகிழ்ச்சிபெற இச்சிறு வியாசம் எழுதலானேன்.

நம்தேசம் உலகத்திலுள்ள தேசங்க ளெல்லாவற்றிலும் சிறந்ததென்பது முற்காலத்திய சரித்திரங்களால் நமக்கு நன்குபுலப்படுகிறது. தக்ஷண பூமி யென்னப்பட்ட இத்தென்னிந்தியாவில் நம் தாய்ப்பாஷையாகிய தமிழ்ப்பாஷை சிறந்தோங்கி யிருந்ததென்பதும், சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் தம் தமிழ்ப்பாஷை சிறப்புற்றோங்கத் தங்கள் உடல், பொருள் இவைகளால் உழைத்தார்கள் என்பதும் சாஸ்திரவாயிலாகத் தெற்றென விளங்குகிறது.

ஏதோ காலவியல்பு நாம் இக்கதியடையலானோம். மேல்நாட்டாரும் கீழ்நாட்டாரும் தங்கள் சுயதேசபாஷைகளினால் முன்வந்தார்களென நன்கு அறிகிறோம். நம்தேசத்தில் நம்தேசபாஷையாகிய தமிழ்ப்பாஷை பேரும், புகழும் அடையச் செந்தமிழ்ச் சங்கங்களும், செந்தமிழ்ப் பத்திரிகைகளும், தினசரி, வார, மாத பத்திரிகைகளும் அநேக தமிழ் நாவல்களும் விருத்தியடைந்து வருகின்றன.

நம்நாட்டில் செந்தமிழின் பெருமையை எடுத்துக்காட்டியும் தமிழ்ப்பாஷையாகிய நம் தாய்ப்பாஷையின்பேரில் அபிமானம்வைத்து அதனை

உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர உழைக்கும் பத்திரிகைகளில் நமதானந்தன் சிறந்ததென்றே செப்பலாம்.

"இத்தமிழ் நாட்டில் தலைமைபெற்று விளங்குவது இது ஒன்றே" என்பது போதிய சான்றாகும்.

நமதானந்தன் காலத்துக்கேற்றவாறு செந்தமிழ் நடையில் யாவரும் எளிதிலுணருமாறு வெளிவருகின்றனன். நமதானந்தனை நாம் வாசித்துவரும்போது விஷயங்களின் தெளிவும், செந்தமிழ் நடையும், பத்திரிகையின் அழகும், உலகமுன்னேற்றத்தைக்கருதி நடத்திவரும் கனம் பத்திரிகாசிரியரவர்களின் புகழும் தெற்றெனவிளங்க நாம் சதா ஆனந்தத்தில் மூழ்கிவருகின்றோம்.

பத்திரிகையின் உயர்வும் தாழ்வும் சந்தாதாரரைப்பொறுத்தே நிற்கின்றன. சிற்சில பத்திரிகைகள் ஆதரிப்பாரின்றி மறைந்து விடுகின்றன. நீர்க்குமிழிபோலும் மேகத்தின் மின்னலைப்போலும் பத்திரிகைகள் மறைந்தொழிந்தால் நம் நித்திய தரித்திரத்தின் இறுதிக்காலம் எப்போது வரும்?

அருமைச் சோதரர்களே! நமதானந்தனின் சந்தா கிருபநேயர்களே! ஆனந்தனின் முன்னேற்றத்தைத் தன்னேற்றமெனக் கருதி போஷகரை அதிகப்படுத்துவோமாக. தற்சமயம் இருக்கப்பட்ட சுமார் 10000 சந்தாதாரர்களும் புதிதாக ஒவ்வொருவரைச் சந்தாதாரராகச் சேர்ப்பது கடினமன்று. மிக எளிதேயாகும். ஆதரிப்போர் அதிகமாகும்போது நமதானந்தன் ஆனந்தம் அடைவதோடு நாமும் மாதமிருமுறை நமதானந்தனின் உள்ளுரைகளை அதிகமாகப் படித்து ஆனந்தம் அடையலாம்.

நமதானந்தனின் சந்தாநேயர்களில் அநேக பிரதம உபாத்தியாயர்கள் இருக்கலாம். அன்னவர்கள் செய்யவேண்டிய கடமையை உபாத்திமைத் தொழில் புரியும் யான்தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அஃதென்னவெனில் நம் காருண்ய கவர்ண்மெண்டாரால் நம் அறிவை விருத்திசெய்யவும், நம் குறையைத் தீர்க்கவும் ஏற்பட்டிருக்கும் உபாத்திமைச் சங்கங்களிலெல்லாம் அருமைச் செல்வக்கொழுவியாகிய ஆனந்தனை வருவித்து நம் அறிவை மென்மேலும் விருத்திசெய்வோமாக.

இப்பரத நாட்டிலுள்ள ஒவ்வொரு உபாத்திமைச் சங்கமும், சங்க அங்கத்தினர்களெல்லோரும் இவ்விஷயத்தை ஆதரிப்பார்களென்று நம்புகிறேன்.

ஒவ்வொரு உபாத்திமைச்சங்கமும் ஆனந்தனை ஆதரித்துப் போஷராகநின்று கிராமஜனங்களின்மத்தியில் நம் தாய்ப்பாஷையின் பெருமையையும், மற்றும் வியாச விஷயங்களையும், ஆனந்தன் போதிக்கும் சத்விஷயங்களையும் எடுத்துரைத்து ஒவ்வொருவர் கரங்களிலும் நின்றுலவுமாறு செய்யுமென நான் நம்புகிறேன்.

இவ்வூருணி மாநகரின்கண் நடைபெற்றுவரும் உபாத்திமைச் சங்கத்திற்கு ஆனந்தனைத் தருவிப்பதற்கு, சந்தாநேயர்களிலொருவரும் எமதாப்த நண்பருமாகிய கனம் அ. அருணாசலம் உபாத்தியாயர் அவர்களும் யானும் 29-11-19ல் நடைபெற்ற ஷை சங்கத்தன்று ஓர் தீர்மானம் கொணர்ந்து, பிரரேபனை செய்யச் சங்கத்தார் சஞ்சிகையைப் பார்வையுற்று எல்லோரும் ஏகோபித்த மனமாய்த் தீர்மானத்தை அங்கீகரித்தனர். இவ்விஷயம் நமதானந்தனின் வளர்ச்சிக்கும் நம் தாய்ப்பாஷையின் அபி

விருத்திக்கும், நம் தமிழ்நாட்டின் க்ஷேமத்திற்கும் மிகுந்தசாதனமா யிருக்கும்.

ஆனந்தனின் சந்தாநேயர்களாகிய ஆசிரியர்களே! சகோதரர்களே! நாம் செய்யவேண்டிய முக்கிய கடமைகளில் இதுவும் ஒன்ருகும்.

இப்பெருங் கைங்கரியத்திற்கு முன்வந்துழைக்க வேண்டுமென உங்களைப் பணிவோடு கேட்டுக் கொள்ளுகின்றனன்.

எல்லாம்வல்ல பரம்பொருள் துணை. சுபம்.

S. ஏசுதாசன், க்ஷத்திரிய வித்தியாசாலை,
கல்லூருணி, (அருப்புக்கோட்டைத் தாலுகா).

குறிப்பு:—இத்தகைய கடிதங்கள் அனேகம் நம்மிடம் சந்தாநேயர்களால் அனுப்பப்பட்டிருக்கின்றன. தற்புகழ்ச்சியாய்த் தோன்றுமோ வென்னும் ஐயத்தால் நாம் இதுகாறும் ஒன்றையேனும் வெளியிடவில்லை. யாவற்றையுமே பிரசுரிக்காது விட்டாலும் சந்தாநேயர்கட்கு அதிருப்தியை யுண்டாக்குமெனக் கருதி இதை வெளியிடத் துணிந்தோம்.

உபாத்திமார்களின் சங்கங்கள் தாய்ப்பாஷையை விர்த்திசெய்யத்தக்க எந்தச் சஞ்சிகையையேனும் ஆதரித்து, அதன் மூலமாய் ஆரம்பக்கல்வியை நல்ல நிலைமைக்குக் கொணர்ந்து, நம் தாய்ப்பாஷையை முன்னுக்கு வரச் செய்து, நம் தாய்நாட்டின் க்ஷேமத்தை விர்த்திசெய்ய வேண்டுமென்பதே நமது மனப்பூர்வமான பிரார்த்தனை யாதலால், இவ் வியாசத்தைப் பற்றி நாம் ஒன்றும் அதிகமாய்க் கூருது விடுகிறோம். இத்தகைய பொது நலத்திற்காகப் பாடுபடும் அறிவாளிகளுக்கு ஆண்டவனது பூரண ஆசிகிடைப்பது உண்மை.

பத்திரிகாசிரியர்.

சம்பாஷணை

சம்பாஷணை யாவது, ஒருவரோடொருவர் பேசுவது. நாம் பிறரோடு பேசுவதில் வெகுசாக்கிரதையாய் இருக்கவேண்டும். ஏனெனில், பேச்சினுலேயே நன்மைதீமைகள் விளைகின்றன. ஆதலின், பேசுவதில் சிற்சில விதிகளை யனுசரிக்க வேண்டும்.

1. பொய் என்று அறிந்ததையும், மெய்யோ, அல்லது பொய்யோ எனச் சந்தேகமா யிருப்பதையும், நிசம் என்று சொல்லலாகாது. பொய்யால் பல தீமைகள்நேரிடும். பொய் பேசுகின்றவர்களைப் பிறர் அவமதிப்பதன்றி எக்காலத்திலும் எவரும் நம்பமாட்டார்கள். "பொய்சொன்ன வாய்க்குப் பொரியும் கிடையாது" என்ற பழமொழியால், பொய் பேசுபவர் மிக்க தரித்திரராவார் என்றும் தெரிகின்ற தல்லவா! ஆதலின், எப்பொழுதும் உண்மையே பேசவேண்டும்.

2. நம்மைக்காட்டிலும் கல்வியிற் சிறந்தவரிடத்துச் சம்பாஷிக்கும் போது, பேச்சுக்களை அதிகமாய்ப் பேசாமல், ஆலோசித்து, அளந்துபேசவேண்டும். அங்ஙனமன்றி அதிகமாய்ப் பேசினுல், அறியாமை வெளிப்படுவதோடு அவமதிப்புக்கும் ஏதுவாகும். அல்லாமலும், அப்படி மிதமிஞ்சிப்

பேசுவதால், பிறர் பேசுவதற்கு வழியில்லாமல் போகின்றது—போனால்' பிறரிடமிருந்து,எதுவும் தெரிந்துகொள்ள இடம் ஏற்படாமற்போகின்றது.

3. பிறர் பேசிக்கொண் டிருக்கையில் இடையில் தடுத்துப் பேசலாகாது. அப்படித் தடுத்துப் பேசாதிருந்தால், அவர் பேச்சால் பற்பல நியாயங்கள் தெரிவதோடு, அதற்கு ஆலோசித்துப் பதில்சொல்வதற்கும் இடமுண்டாகின்றது.

4. எதுசொல்லத் தொடங்கினாலும் அதைச்சொல்வதற்கு முன்னமே, 'இன்னதை இப்படித்தான் சொல்லவேண்டும்,' என்று ஆராய்ந்து, அமைத்துக்கொண்டு, பின் அதை வழியாய்ப் பேசவேண்டும். கருத்துக்குத் தகுந்த சொற்களைப் பதட்ட மில்லாமலும், தாழ்ந்தகுரலோடும் சொல்லவேண்டும். ஆலோசனை யின்றிப் பேசுகின்றவர்கள், தாம் பேசிய பிறகு,—"ஐயோ! என்னபேசிவிட்டோமோ! ஞாபகமில்லையே! நினைத்தது ஒன்றும், பேசியது மற்றொன்றுமா யிருக்குமோ! இதற்கு என்ன செய்யலாகும்," என்று எண்ணி வருந்துவார்கள்.

5. இனி, சிலர் சிற்சில விஷயங்களில் தேர்ச்சி யுள்ளவர்களா யிருப்பார்கள். ஆதலின், அப்படிப் பட்டவர்களுடன் சம்பாஷணை செய்யுங்காலத்து, யார்யார் எதெதில் தேர்ச்சியுள்ளவர் என்பதைக் கவனித்தறிந்து, அவரவர்க்குத் தெரிந்ததைக் குறித்து அவரவரோடும் பேசவேண்டும்.—அப்படிப் பேசினால், அவரவர் சொல்வதில் முக்கியமானவற்றைத் தெரிந்துகொண்டு, நன்றாய் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளலாம். ஆதலால், எவரோடும் மேற் கூறியபடி, நிதானமாய்ச் சம்பாஷித்தால் எங்கும் உபயோகமாகத்தக்க பற்பல விஷயங்களைத் தெரிந்து, பலவகை நன்மைகளையும் அடையலாகும்.

6. ஒருவன் உண்மை பேசுகின்றவனல்லன் என்றும், கவுரவமுடையவனல்லன் என்றும் தெரிந்தால், அவன் எவ்வளவு ஆச்சரியமான செய்தியைச் சொன்னாலும், அதை உடனே நம்பிவிடலாகாது. சிலர் அயலாருடைய எண்ணத்தை அறிவதற்காகவே, பொய்யை மெய்போற் கூறுவதுமுண்டு. இன்னும், வேறு சிலர், பிறரிடத்தி லிருந்து உண்மையைத் தாம் தெரிந்து கொள்வதற்காகவும், தாம் கேள்விப்பட்டதைக் கேள்விப்பட்டபடியே சொல்வது முண்டு. அதனால், பிறர், சரிதான் என்றால் தான் கேள்விப்பட்டது உண்மையே என்றும், அவர்கள் அப்படியன்று, இப்படியாம், என்றால் அதனாலும், உண்மை இதுவே யென்றும் தெரிந்துகொள்வார்கள். வேறுசிலர் பிறர்க்குக் கோப முண்டாவ தற்காகவும் பொய் சொல்லுவதுண்டு. இவையெல்லாம், உலகவியற்கை என்று எண்ணவேண்டும்.

7. அதிகமாய்த் தோத்திரம் செய்து பேசுகின்றவர்களிடம் வெகுசாக்கிரதையாகவே இருக்கவேண்டும். இல்லாவிடின், ஒருக்கால் அவரது மோசத்திற் குள்ளாக நேரினும் நேரிடும்.

8. அல்லாமலும், யாரும் தங்களைத்தாமே தோத்திரம்செய்து கொள்ளலாகாது. அதனால், உள்ள கௌரவமும் கெட்டுவிடுமே யல்லது, கீர்த்தி அதிக மாகமாட்டாது. பிறர்க்கும் அது வெறுப்பாயிருக்கும்.

9. எதிரில் இல்லாதவர்களைக் குறித்துப் பேசநேர்ந்தால், அவர்களுடைய குணத்தை மாத்திரம் எடுத்துப் பேசவேண்டும். ஒருவர் இல்லாத சம

யம்பார்த்து, அவருடைய குற்றத்தை எடுத்துச்சொல்லல் ஆகாது. சிறிதும் குணமில்லாத அயோக்கியர்களா யிருந்தாலும், அவர்களைப் பற்றி, ஒன்றும் பேசாமலிருப்பதே பெருந்தன்மையாகும்.

10. பிறர்மனம் நோகும்படி பேசலாகாது. அப்படிப் பேசினால், ஒருக்கால் அவர் மானத்துக்கு அஞ்சி உயிர்விடவும் கூடும்.

11. எவரையும் அதட்டிப்பேசலாகாது. நிதானமாகவே பேசவேண்டும். எப்பொழுதும், நல்லவார்த்தையா லாவது, கெட்ட வார்த்தையா லாகாது. நல்லவார்த்தையே எக்காலமும் யாவர்க்கும் இன்பம் தரத்தக்கது.

12. பிறர் எவ்வளவு கோபம் கொண்டு பேசினாலும் அல்லது வைதாலும், அதைப் பொறுத்திருப்பது மல்லாமல், "ஐயோ! வீணே இங்ஙனம் பாவத்திற்கு உள்ளாகின்றனரே!" என்று மனமிரங்கவேண்டுமே யல்லது, பிரதியாக கோபித்துப் பேசலாகாது.

ஆதலால், நாமும் நல்லவார்த்தைகளையே உபயோகிப்பதுடன் நம்மிடம் கடுஞ்சொற்கள் கூறுவோரிடத்தும் பதில் நல்லவார்த்தைகளையே வழங்குவோமாயின் நாடெல்லாம் வாழ்த்த நலம் பெறலாம். சுபம், சுபம்.

C. நடராஜ செட்டியார்,
வயல்பட்டி, வீரபாண்டி, போஸ்ட்.

குறிப்பு:—மாணவர்கள் முக்கியமாய் இந்த வியாசத்தைக் கவனிக்க வேண்டும். ஒருவரிடம், அதிலும், நம்மிலும் அறிவிலும் அந்தஸ்திலும் மேலானவர்களிடம், பேசுவதெனின், அது மிக்க ஜாக்கிரதையோடு நடத்தப்பட வேண்டிய வேலையாகும். அவசரத்தாலும், ஆத்திரத்தாலும் வார்த்தைகளைக் கஷ்டமின்றி வெளியில் கொட்டிவிடலாம். ஆனல் பிறகு அவற்றில் நமக்குக் கெடுதியை விளைவிக்கும் என்று புலப்படும் ஒரு வார்த்தையை மட்டு மேனும் திரும்ப எடுத்துக் கொள்ள முடியாது. ஒருவன் தன்னிடம் சற்று நேரம் பேசுவதிலிருந்தே, அறிவாளி அவனுடைய, யோக்கியதை, அறிவின் அளவு, குலம், குணம் யாவும் தெரிந்து கொள்வான். தன்னோடு பேசுவோனுடைய பேச்சை முடியுமுன்னவது, அவன் பேச்சில் இடையில் நுழைந்தாவது வலியப் பேசுவோன், தன் பெருமை, சாமர்த்தியம் முதலியவற்றைக் கூறுவோன், தன் இரகசியத்தை வலிய வெளியிடுவோன், ஒருவனுடைய இரகசியத்தைக் கூறும்படி கேட்போன், ஒருவன் மறைத்து வைத்துக்கொண்டிருக்கும் இரகசியம் தனக்குத் தெரியுமென்று அவன்முன் அகாரணமாய் அல்லது பெருமைக்காக கூறுவோன், இவர்களெல்லாம் அறிவாளிகளால் இகழப் படுவார்கள் அவமதிக்கப்படுவார்கள்; இவர்களை மேலோர் தங்கள் சகவாசத்தில் வைத்துக்கொள்ள மாட்டார்கள். ஆகையால் சம்பாஷணையில் எப்போதும் மிக்க ஜாக்கிரதையா யிருக்க வேண்டும்.

பத்திரிகாசிரியர்.

ஒரு மன வருத்தம்

அன்பார்ந்த சந்தா நேயர்களே! இச் சஞ்சிகையின் 222-ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட் டிருக்கும் ஈகை என்ற விஷயம் அச்சிடப்பட்ட பின், அது ம-ள-ள-ஸ்ரீ வி. பூ. துரைசாமி நாயனுர் தெள்ளார் என்பவரால் கடந்த மேமீ வெளிவந்த "தரும சீலன்" சஞ்சிகைக்கு எழுதி யனுப்பப் பட்ட தென்று கண்டோம். இதுவும் கடந்த நமது சஞ்சிகையில் வெளி வந்த பிறர் குற்றங் கூறுவான் தன்குற்ற முணரான் என்ற வியாசத்தை அதே "தரும சீலன்" சஞ்சிகையி லிருந்தெடுத்து எழுதியனுப்பிய அதே உபாத்தியாயரால் நமக்கு அனுப்பப் பட்டிருக்கிறது. ஈகை என்ற விஷயத்திற்குப் பின்னுள்ள "ஆசை" என்ற விஷயமும் அவர் அனுப்பியதே. இதைப் பற்றியும் இப்போது நாம் ஐயப்படுகிறோம். இத்தகைய இழிவான நடக்கை யுடையோர், நமது சிறுவர்களுக்கு நற்புத்தி நன்னடக்கைகளைப் போதிக்கவேண்டிய உபாத்திமைத் தொழிலுக்கு அருகராவாரோ? நாம் பன்முறை வேண்டிக் கொண்டும், இத்தகையோர் நமது ஆனந்தனுக்கு அகௌரவத்தை யுண்டாக்க வேண்டு மென்கிற தீய எண்ணம் கொள்வது என்ன காரணமோ அறியோம்.

இனியும் இவ்வாறு நடந்து கொள்வோரைப் பற்றிப் பிரத்தியேக விளம்பரங்கள் பிரசுரித்து எங்கும் பரவச் செய்தலே தகுதி யெனக் கருதி யிருக்கிறோம்.

பத்திரிகாசிரியர்.

சிறுவர்க்கு உரிய சிறந்த உபதேசம்

வைகறைத் துயிலேழு

இஃது ஔவைப் பிராட்டியார் திருவாய் மலர்ந்தருளிய ஆத்திசூடியிலுள்ள அருமைத் திருவாக்கு. இதன் பொருள் விடியற் காலத்தில் நித்திரையை விட்டு எழுந்திரு என்பது. மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகல், எற்பாடு எனப் பொழுதை அறுவகையாக வகுத்திருக்கிறார்கள். இவை அஸ்தமனகால முதல் ஒவ்வொன்றுக்கும் பப்பத்து நாழிகையாக முறையே கொள்வன வாகும். இவற்றைச் சிறு பொழுதென்பர். வைகறை என்பது இரவில் இருபது நாழிகை முதல் சூரிய உதயமாகும் வரையிலுள்ள காலம். இந்தக் காலத்தில் எழுந்திருப்பதனால் தேக ஆரோக்கியமும், சுறுசுறுப்பும், உழைப்பில் ஊக்கமும், எடுத்த காரியத்தை முடிக்கும் ஆற்றலும், சித்தத் தெளிவும் உண்டாகும். இந்த வேளையில் சிந்தித்துத் தீர்மானஞ் செய்யப்படும் விஷயங்களில் அநேகமாக எல்லாம் சித்தி பெறும். இதனாலேதான் ஆன்றோர்.—

> வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யும்
> நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து—வாய்வதில்
> தந்தையுந் தாயுந் தொழுதெழுக வென்பதே
> முந்தையோர் கண்ட முறை

என்று ஆசார முறையில் வகுத்தருளினர்.

இதன் பொருள்:—

விடியற் காலையில் விழித்துக் கொண்டு செய்தற் குரிய தர்ம காரியங்களையும், திரவியம் சம்பாதிப்பதற்கு வேண்டிய காரியங்களையும் ஆராய்ந்து ஆலோசித்துக் கொண்டு, பின்பு பொழுது விடிந்த வுடனே தாய் தந்தையரைத் தொழுதுகொண் டெழுந்து அதற்கப்பால் ஒரு காரியத்தைச் செய்ய வேண்டு மென்பதாம்.

மனம் இரவு முழுதும் தூக்கத்திலிருந்து ஓய்வு பெறுகிறபடியினால் துயிலெழுந்ததும் அது தெளிவாய் வேறு சிந்தனையற்று இருக்கிறது. இந்தக் காலத்தில் முன் காலத்தவர் வேதாத்யயனம் செய்து வந்தனர். பாடகர்கள் பாடல்களைப் பாடிப் பழக்கஞ் செய்து கொள்வதற்கு இதனையே ஏற்ற காலமாகக் கொண்டிருக்கின்றனர். தற்காலத்தில் தேகப் பயிற்சி செய்தற்கு இதனை ஏற்றகாலமாகக் கொண்டிருப்பது நாமறிந்ததேயாம். விடியற் காலத்தில் எழுந்திருக்க வேண்டுமென்பது பெரியோர் கட்டளையாவதுமல்லாமல், கடவுளின் கட்டளையுமாகுமென்பதற்கு அந்த வேளையில் கோழி காகங்கள், முதலிய பறவைகள் கூவி நம்மையெழுப்புவதே போதுமான சான்றாகும். இந்த உண்மையறியாத சில மந்தர்கள் நித்ரா தேவியின் வசமாய்ப் படுக்கையை விட்டு எழுந்திருக்க மனம் வராமல் நெடுநேரம் நித்திரை செய்கிறார்கள். இதனாலே விளையும் கேடுகள் பலவாம். வேலைகளைச் சுறுசுறுப்பாய்ச் செய்தற்குரிய அருமையான காலம் வீணே கழிந்து போவதுமல்லாமல் மல மூத்திரங்களுக்கும் தடை ஏற்படுகின்றன. விடியற்கால வேளையே மல மூத்திரங்கள் பிரியும் காலமாதலினால் அவ் வேளையில் தூங்கினால் அவை தடைபடுகின்றன. மல மூத்திரங்கள் தடைபடுவதனால் நேரிடும் நோய்கள் பலவாம். ஆகையினால் விடியற் காலத்தில் எழுந்திராதவர்கள் வியாதினால் அவஸ்தைப் படுகிறவர்களாவார்களென்பதும் அல்லாமல் தங்கள் காரியங்களைச் சரியானபடி முடிக்க முயலாதவர்களாகி வருந்துவார்களென்றும் ஏற்படுகிறது.

ஆகையினால் ஔவைப் பிராட்டியாரின் இந்த அருமையான போதனையை மறவாதிருந்து நல்வழிப்பட முயல்வதே அறிவாளிகளின் செய்கையாகும். காலையி லெழுந்திருப்பதனா லாகும் நன்மையைப் பற்றி வைத்திய சாஸ்திரங் கூறுவது:—

புத்தி யதற்குப் பொருந்து தெளிவளிக்கும்
சுத்த நரம்பினற் றூய்மையுறும்—பித்தொழியுந்
தாலவழி வாதபித்தம் தத்தநிலை மன்னுமதி
காலைவிழிப் பின்குணத்தைக் காண் என்பதாம்.

இதன் பொருள்:—

உதய காலத்தில் விழிப்பவர்களுக்குப் புத்தித் தெளிவை உணர்த்துகின்ற சுத்த நரம்பு என்னும் ஒருவித நரம்பினது துவாரத்தில் நிறைந்திருக்கின்ற நீரானது கலங்கலின்றிப் பரிசுத்தமாயிருக்கும். பைத்தியம், கோபம் இவை நீங்கும். வாதமும் பித்தமும் சிலேஷ்மமும் தத்தம் இடங்களிலேயே பொருந்தும் என்பதேயாம்.

இதனால் வைத்திய சாஸ்திரமும் விடியற் காலையி லெழுந்திருத்தல் இன்றியமையாததென்று வற்புறுத்துகின்றது கண்டு தெளிக.

வரகவி திரு-சுப்ரமண்ய பாரதியார்,
சென்னை.

வைத்தியக் குறிப்பு

(174-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இன்புளுயன்ஸா என்னும் கொடிய சுரமானது ஒருவித அம்மை சுரமென்று சொல்லலாம். அச்சுரமானது ஒட்டுவாரொட்டியென்பது குன்றின் மேலிட்ட தீபம். இச்சுரமானது பம்பாய், கல்கத்தா, மதராஸ் என்னும் மூன்று இராஜதானியிலும் அதிலுள்ள சகல ஜில்லாக்கள், கிராமங்கள் முத

லான இடங்களிலும் வியாபித்து உயிர்களை ஹிம்சிப்பது பிரசித்தம். அன்றியும் இது பல உயிர்களை நாசம் செய்துவிட்டது. செய்துகொண்டு வருகின்றது. செய்யப்போகின்றது. ஆனபடியால் புத்திமான்கள் இதைச் சம்பூரணமாய் உணர்ந்து இதற்குப் பரிகாரம் தேட வெகு பிரயாசை எடுத்துக்கொண்டும் நாளதுவரையில் யாதாவதொருபரிகாரம் கிடைத்ததாய்த்தெரியவில்லை. பல நிபுணர்கள் பலவித யோசனைகளையும் பல பத்திரிகைகளில் பிரசுரித்து வருவதில் பலர்க்குப் பலன்தருவதாயிருந்தாலும் இச்சுரத்திற்குப் பலர் சொல்லும் சிகிச்சையும் பயன்படத்தக்கன வல்லவென்று தீர்மானமாய்ச்சொல்லலாம். ஆனால் சிலர்அநேக ஒளடத சிகிச்சையால் குணப்படுத்தியிருப்பதாய்ச் சொல்லலாம், குணப்படுத்தியு மிருக்கலாம். அதனாலாயே ஒளடதம் இச்சுரத்திற்கு விசேஷமென்பது ஒப்பத்தகுந்ததல்ல. சாதாரணமாய் இதுவரையில் இச்சுரத்தால் மாண்டிருக்கும் பல உயிர்களும் ஒளடதப் பிரயோகங்களினாலேயே என்று திண்ணமாகச் சொல்லலாம். எப்படியெனில் இச்சுரமானது கொடிய உஷ்ணத்தைக் குரல்வளையில் உண்டுபண்ணுகின்றது. அத்துடன் நுண்ணிய ஒளடதங்கள் பிரயோகித்தாலும் உடனே (டபில் நிமோனியா என்னும்) கபவாதசுரம் வந்துவிடுகின்றது. அச்சுரம் வந்தால் உயிர்ச்சேதங்கள் பல ஏற்படுகின்றன. அநேகர் முதல் முதல் இச்சுரத்திற்கு "அஸ்பைரின்" "பெனசிடின்" என்னும் ஒளடதங்களும் "டையபிரடிக் மிக்சர்" என்னும் ஒளடதத்தையும் உபயோகித்து வந்தார்கள். இவற்றால் சிலர் குணமடைந்தும் பலர் மாண்டும் போயினர். அநேகர் முதல் நாட்களில் இன்ன சுரமென்றுணராமையால் கொய்னாமிக்சரைப் பிரயோகித்து நிமோனியாவை உண்டாக்கியு மிருக்கின்றார்கள். தற்காலத்தில் மாண்டவர்களில் பலர் ஒளடதப் பிரயோகத்தினாலேயே என்று நான் சத்தியமாய்ச் சொல்லுவேன். எப்படியெனில் இச்சுரத்திற்கு ஒளடதப்பிரயோகமில்லாதிருந்தவர் ஒருவராகிலும் "டபில் நிமோனியா" என்னும் கொடிய மாறுதல் அடையவேயில்லை. திருட்டாந்தமாகச் சில கிராமங்களில் இச்சுரத்தை அம்மை சுரமென்று தீர்மானித்து ஒளடதங்கள் பிரயோகிக்காமல் வேப்பிலையின் காற்றும், நெல்பொரி கஞ்சியும், பேயம் பழ ஆகாரமும் கொண்டு அனுஷ்டித்தவர்களில் ஒருவருக்காவது உயிர்ச்சேதமும், நிமோனியா சுரமும் உண்டானதே கிடையாது. பண்ரொட்டியிலும், கீழ்கௌரப்பட்டு, மேல்கௌரப்பட்டு, பட்டாம்பாக்கம், நெல்லிகுப்பம் என்னும் கிராமங்களிலும் ஒருவர்க் காவது உயிர்ச்சேதமும் கிடையாது; மேல் சொல்லிய நிமோனியா உண்டானதும் கிடையாது. தவிர என் அனுபவத்தில் சென்னையின்கண் நான் சுமார் 1000 பேருக்கு இதுவரை இச்சுரத்திற்கு பாலும் நெல்லு பொரி கஞ்சியும் பேயம் பழமும் தவிற வேறு ஒன்றையும் உபயோகிக்காமல் சிகிச்சை செய்ததில் ஒருவருக்காவது ஒரு கெடுதியும் உண்டானதில்லை. ஆனபடியால் இதைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் நான் சொன்னதுபோல் செய்வார்களேயானால் 3 தினத்தில் இச்சுரமானது இருந்த இடம் தெரியாமல் போய்விடுகின்றது. இச்சுரத்திற்கு காரம், புளி, மிளகு, உப்பு, அரிசிச்சாதம், ரொட்டி, அப்பம் முதலான எவ்வித தின்பண்டங்களும் உதவாது. சோடா, பால், நெல்பொரி கஞ்சி இதைத்தவிர வேறு எவ்வித ஆகாரமும் கொடுத்தல் கூடாது. இரும்பலுக்கு பேய்வாழைப்பழம் கொடுக்கவும். பேயம்பழம் எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்கலாம். ஒருபழம் சாப்பிட்டவுடனேயே இருமல் முதலான சகல பாதைகளும் நிவர்த்தியாய் விடுவதை சகலர்களும் கவனிக்கலாம்.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்.

கற்கோட்டை—நாவல்

(199-ம் பக்கத்தொடர்ச்சி)

இவர்கள் பேசி முடிந்ததும் சகோதரர்க ளிருவரும் இரத்னமாளிகையி லிருந்து திரும்பி வந்தார்கள். அங்கு நடந்த கோரக்காட்சியைக் கண்ணபிரானும் கமலாம்பாளும் கேட்டபோது மிக்க வியப்பும் பிரமையுமடைந்தார்கள். அந்தப் பிரபு பாதாளக் கிணற்றில் வீழ்ந்ததை யறிந்ததே மணவாளன் மாளிகையை விட்டு ஒட்டம் பிடித்தானென்று தெரிந்தது. சகோதரர் இருவரும் நடந்த சங்கதிகளைக் கூறி விட்டுக் கண்ணபிரானை நோக்கி,

“சகோதரனே! அங்கு அத்தகைய சம்பவம் நேர்ந்ததெனினும் எங்கள் மனம் உன்னிடத்திலேயே இருந்தது. ஏனெனில் நாம் அபாய நிலையிலேயே யிருக்கிறோம்.. ...” என்றதே.

கண்ணபிரானும் கமலாம்பாளும் திடுக்கிட்டு “என்ன சங்கதி? என்ன சங்கதி? இன்னும் என்ன புது ஆபத்து? சீக்கிரம் கூறுங்கள்” என்றார்கள்.

மூத்த சகோதரன்.—“கூறுகிறேன். ஆலசியம் செய்ய இது சமயமல்ல. எங்கள் தமையனாராவது நாங்களாவது, கண்ணபிரான்! நீயாவது ஒருவரும் மன்னுப்பு பெறவில்லை. நமது ஆபத்து சற்றேனும் நீங்கவில்லை. கணையாழி இராணியிட மிருந்து களவாடப்பட்டு ஒரு சந்தர்ப்பத்தால் எங்கள் கையில் சிக்கியது” என்று அரிய நாயகி மூலமாய்த் தங்களுக்குத் தெரியவந்த சங்கதிகள் யாவும் கூறி “இனி யாலசியம் செய்யாமல் நாம் மூவரும் உடனே இதை விட்டுக் கிளம்பிவிட வேண்டும்” என்றார்கள்.

கமலாம்பாள்.—“ஆம்! இச்சமயம் நானும் தைரியத்தை விடாமலிருக்கிறேன்” என்றாள்.

கண்ணபிரான்.—“நீ என்னைக் காப்பாற்றும் பொருட்டாக இத்தனை யாபத்துகளையும் ஏற்றுக்கொண்ட வரையில் இப்போதுன்னைத் தனியே விட்டு நான் போய்விடமாட்டேன்; நீயும் கூடவே வா” என்றான்.

அதற்கு அன்பு மிகுந்த அந்நங்கை “அந்தோ, எனக்கு என்ன இக்கட்டு வரினும் அஞ்சாது நான் உம்மோடு வருவேன்; ஆனால் இச்சமயம் என் தேகம் மெலிவடைந்திருக்கிறது. நான் கூடவந்தால் உங்கள் பிரயாணம் அடிக்கடி தாமதப்படும்; அதனால் உங்களுக்கு ஆபத்து நேரலாகும். நீங்கள் மட்டும் சென்றால் அதிவேகமாய் அன்னியநாடு போய்ச் சேர்வீர்கள்” என்றாள்.

கண்ணபிரான் நீ மிக்க பலகீன ஸ்திதியி லிருப்பதாலேயே அவசியம் நான் உன்னைவிட்டுப் பிரியமாட்டேன் என்றான்.

இருவர் வாக்குவாதத்தையும் கேட்டுக்கொண் டிருந்த சகோதரர் இருவரும் அவர்களது பரஸ்பர அன்பைப் புகழ்ந்து “அப்படியாயின் நாம் நால்வருமே போவோம்” என்று தீர்மானமாய்க் கூறினார்கள். அச்சமயம் கண்ணபிரானுடைய நன்றியுள்ள ஆட்களாகிய கவசம், கேடையம் இருவரும் பிரமையும் திகிலும் கலவரமு மடைந்த முகங்களோடு அறைக்குள் ஓடிவந்தார்கள்.

* * * * *

ஸர்தார் அமிர்த நாயகத்தின் தங்கையாகிய இரத்னம்மாள் வீட்டில் மேற்கண்ட சம்பவங்கள் நடந்துகொண்டிருக்கையில் சில குதிரை வீரர்கள் தெற்கிலிருந்து கரும்பூரை நோக்கித் துரிதமாய் வந்துகொண் டிருக்கிருர்கள். அவர்கள் நான்குபேர். அவர்கள் உடையால் அவர்கள் இராணியின் மெய்க்காப்புப் படையைச் சேர்ந்தவர்களென்று தெரிந்து கொள்ளலாம். அவர்கள் முனிவிங்கனும் அவன் ஆட்களுமே. அவர்கள், சகோதரப் பிரபுக்கள் இந்திரபுரியை விட்டுப் புறப்பட்டபின் நெடுநேரங் கழித்து, அதாவது இராணி அரியநாயகியைக் கற்கோட்டையின் இரகசிய அறையில் கண்டுபிடித்த பிறகு, புறப்பட்டார்கள். ஆயினும் அதிவேகமாய்ச் சென்றதால் சகோதரர்கள் கரும்பூர் சேர்ந்த மூன்று நான்கு மணி நேரத்திற்குள் அவர்களும் வந்து சேர்ந்தார்கள். அரியநாயகியிடம் கணையாழி யில்லை யென்று தெரிந்துகொண்டதே, கண்ணபிரானைக் காப்பாற்றுவதற்காகவே திரவியவிங்கம் பிரபுவின் சகோதரர்கள் வசம் அது அனுப்பப்பட் டிருக்கவேண்டுமென்று இராணி ஊகித்துக் கொண்டாள். சகோதரப் பிரபுக்கள் வெள்ளைக் குடிசை யருகில் தன் வீரர்களைத் தோற்கடித்து அரியநாயகியை மீட்டசங்தியும் இராணிக்குத்தெரியும். ஆகையால் இராணி அரியநாயகியிடம் கணையாழியில்லை யென்று கண்ட வுடனே முனிவிங்கைக் கரும்பூருக் கனுப்பிவிட்டாள்.

முனிவிங்கும் அவன் ஆட்களும் கரும்பூரைநெருங்கும்போது, பலராமனைப் பிடித்துக்கொண்டு எதிரில் வரும் ஸர்தாரின் குதிரை வீரர்களைக் சந்தித்தார்கள். முனிவிங் அந்த வீரரை நோக்கி,

"ஆ கரும்பூரில் என்ன விசேஷம்? அந்தத்துரோகியாகிய கண்ணபிரான் ..." என்பதற்குள், அதைக்கேட்ட வீரர்களும் பலராமனும் திடுக்கிட்டு வியப்பும் சந்தேகமு மடைந்து யாவரும் ஒரே குரலாய், "என்ன! துரோகியா?" என்றுர்கள்.

முனிஸிங்.—"ஆம் பத்தாயிரந்தரம், துரோகியே. நீங்கள் ஏன் அப்படி திடுக்கிட்டுக் கேட்கிறீர்கள்?" என்றுன்.

ஸர்தாருடைய வீரர்களில் ஒருவன் "கண்ணபிரானுக்குத்தான் பூரண மன்னுப்பு வந்து விடுதலை யடைந்தானே" என்றுன்.

பலராமன் "ஓகோ அக்கணையாழியில் ஏதாவது பிசகிருக்கிறதோ? அதைக் களவாடிக் கொண்டுவந்து விட்டார்களோ.....என்னிட மிருந்த பத்திரத்தைக் களவாடியது போல்" என்றுன்.

முனிஸிங்.—"சந்தேகமென்ன அதற்கு, அடடா! காரியம் மிஞ்சிவிட்டதே. ஆயினும் அது என் தப்பித மல்ல" என்றுன்.

ஸர்தாருடைய வீரன்.—"நீ இரண்டுமணி நேரத்திற்கு முன்பு வந்திருந்தால் நன்ருயிருந்திருக்கும்" என்றுன்.

அச்சமயம் முனிவிங் பலராமனை யுற்றுநோக்கி "ஆ! இந்த ஆளைப் பார்த்திருக்கிறேன். ஆ! நீ இராணியின் அரண்மனைக்கு வந்திருந்த அன்னிய நாட்டானல்லவா?" என்றுன்.

அதன்மேல் பலராமன் ஸர்தார் முதலியவர்களை அக்கிரமஸ்தர்களென்று தூஷித்து, தன்னை விடுதலைசெய்யும்படி முனிவிங்கை வேண்டிக் கொண்டான். ஆனல் அது பயன்படவில்லை. முனிவிங் பின்பு ஸர்தாரின் வீரர்களிடம் சம்பாஷித்தபோது, திரவிய சிங்கம் பிரபுவின் சகோதர்களே கணையாழியைக் கொண்டுவந்து கண்ணபிரானை மீட்டவர்களென்று தெரிந்

ததும், "ஹா! அந்தத்துரோகிகளா? அடடா நான்மட்டும் இரண்டு மூன்று மணிநேரம் முன்னாடியே வந்திருந்தால் மூன்று துரோகிகளும் அகப்பட்டிருப்பார்களே" என்றான்.

ஸர்தாரின் வீரன்.—"ஒரு சமயம் அவர்கள் இன்னும் நகரத்திலேயே யிருக்கக்கூடும். இப்போதும் விவகாரம் கெட்டுப்போக வில்லை" என்றான்.

முனிஸிங்.—"அடடா! அவர்கள் ஊரில் இன்னும் இருக்கவா நீங்களதை முதலிலேயே கூறாமல் இன்னேரம் என்னோடு காலக்ஷேபம் செய்து கொண்டிருக்கிறீர்கள்? என்று கோபமாய்க் கூறினான்.

வீரன்.—"நாங்களல்ல காலட்சேபம் செய்தது. உமது சம்பாஷணையால் நாங்கள் தாமதப்பட நேர்ந்தது. உண்மையில் எங்கள் ஸர்தார் சுணையாழி விஷயம் உண்மையே யென்று நம்பி அவர்களிடம் கொஞ்சம் மரியாதையோடு பேசினார். அவர் சகோதரி மூவர்க்கும் விருந்தளிக்கப் போகிறாள். ஆகையால் அவர்கள் துரிதமாய்ப் போய்விட மாட்டார்கள்" என்றான்.

பலராமன், எப்படியும் கண்ணபிரான் தப்பக்கூடாதென்ற நோக்கத்தோடு, ஸர்தாருடைய தங்கையின் வீடு அமர்ந்திருக்கு மிடத்தை முனிஸிங்குக்கு அடையாளத்தோடு கூறினான்.

முனிஸிங்.—"தெரிந்துகொண்டேன் தெரிந்துகொண்டேன். அவர்களோடு எத்தனை யாட்க ளிருக்கிறார்கள்" என்றான்

ஸர்தாருடைய வீரன்.—"திரவிய லிங்கம் பிரபுவின் சகோதரிடத்தில் யாருமில்லை. கண்ணபிரானிடம் மட்டும் இருவர் இருக்கிறார்கள்" என்றான்.

முனிஸிங்.—"சரி ஐந்துபேர். நீங்கள் உள்ளூராரானதால் அவர்களைக் கைதுசெய்வதற்குச் சுலபமான மார்க்கமெது வென்பதைக் கூறுங்கள்" என்றான்.

வீரன்.—"நீர் முன்னே ஸர்தாரிடம் இரகசியமாய்க் கண்டு பேசினால் அவர் வீரர்களை உதவியா யனுப்புவார் என்றான்.

முனிஸிங்.—அங்கு இன்னும் வீரர்கள் இருக்கிறார்களோ? என்றான்.

வீரன்.—போதுமானபேர் இருக்கிறார்கள். நீங்கள் நேராய் ஊருக்குள் நுழையும்போது முன்வீதியிலேயே யிருக்கும் ஹோட்டலில் தங்கிவிடுவது நல்லது.

முனிஸிங்.—"சரி சரி, இனி நான் பார்த்துக்கொள்கிறேன்" என்று குதிரையை விட்டான்.

பலராமன்.—"ஐயா! ஐயா! என்னை விடுவிக்காமலா போய்விடுகிறீர்கள்! ஐயா! ஐயா!" என்று கூவினான்.

முனிஸிங்.—"இப்போது அவகாசமில்லை. நான் உன்னைப் பற்றி ஸர்தாரிடம் பேசுகிறேன்" என்று கூறிக் கொண்டே தன் ஆட்களோடு கருப்பூரை நோக்கிச் சென்றான்.

ஸர்தாரின் வீரர்கள் பலராமனை யழைத்துக் கொண்டு சற்று தூரத்திலுள்ள பெரிய சிறைச்சாலைக்குச் சென்றார்கள்.

* * * * *

முன்பு சகோதரப் பிரபுக்கள் இருவரும் சுந்தரநாயம் பிரபுவின் மாளிகையிலிருந்து திரும்பிவருமுன், கண்ணபிரானுடைய ஆட்களாகிய கேடையம் கவசம் இருவரும் தங்கள் எஜமானனை வந்துகாண, போஜனமளிப்பதற்காக ஸர்தார் அவர்களை யழைத்துச் சென்றார். அவர்கள் போசனம் செய்துகொண்டிருந்த அறை வீதியின் ஓரமாயிருந்தது- அதன் சாளரம் வீதியைப் பார்த்தபடி யிருந்ததால், சற்று நேரங்கழித்து சகோதரப் பிரபுக்கள் இருவரும் குதிரைமேல் அதிவேகமாய் வருவதைக் கண்ணபிரான் ஆட்கள் கண்டு "இவர்கள் என் இவ்வளவு ஆத்திரமாய் வரவேண்டும்" என்று சிந்தித்து, இருவரும் தெருவாசற்படியருகில் சென்று நின்றார்கள். பிரபுக்களிருவரும் வாசற்படி யருகில் வந்து நின்றதும் புரவிகளை விட்டிறங்கி, அங்கு நின்றிருந்த இருவரையும் ஸர்தாரின் ஆட்களென்றெண்ணிக் குதிரைகளை யவர்களிடம் ஒப்பித்துத் துரிதமாய் உள்ளே சென்றார்கள்.

கேடையமும் கவசமும் அப் பிரபுக்களின் முகத்தில் தோன்றிய கலவரத்தையும் அவர்கள் துரிதத்தையும் கண்டு மிக்க வியப்பும் சந்தேகமுமடைந்தார்கள். கேடையம் கவசத்தை நோக்கி,

"என்ன சங்கதி? கலவரப்பட ஒரு காரணமும் தோன்றவில்லையே. எனக்கென்னமோ இன்னும் ஏதோ இரகசியம் இருப்பதுபோலும், நடந்த விஷயங்களில் ஏதோ மர்மமிருப்பது போலவும் தெரிகிறது. நீ இங்கேயேயிருந்து என்ன நடக்கிறதென்று கவனி. அப்படி ஏதேனும் ஆபத்துநேர்வதாயின் நாம் எதற்கும் எச்சரிக்கை யாகவே யிருப்போம். நான் குதிரைகளை ஹோட்டலுக்குக் கொண்டு போகிறேன்" என்று கூறிவிட்டுக் குதிரைகளோடு ஹோட்டலை நோக்கி நடந்தான்.

கேடையம் ஹோட்டலுக்குச் சென்று கண்ணபிரான் அசுவமும் தங்கள் குதிரைகளும் கட்டப்பட்டிருக்கும் இடத்திலேயே மற்ற இரண்டு புரவிகளையும் கட்டிவிட்டு அவற்றிற்குச் சரியாய் ஆகாரமளிக்கும்படி ஹோட்டல் ஆட்களுக்குக் கூறிவிட்டுத் தெருவாசற்படியைத் தாண்டும் சமயம், வீதியின் கோடியில் குதிரைகள்வரும் சத்தத்தைக்கேட்டுத் திரும்பிப் பார்த்தான். உடனே வருகிறவர்கள் நால்வரும் இராணியின் மெய்க்காப்புப்படையைச் சேர்ந்தவர்களென்று தெரிந்து கொண்டான். முன்னமே அவன்மனதில் கலவரமுண்டா யிருந்தது. விபரம் புலப்படாவிடினும் என்னமோ ஆபத்து நேரிடப்போகிறதென்று அவன் மனதிற் றோன்றியது. ஆகையால் முனிவிங்கும் அவன் ஆட்களும் ஹோட்டலுக்குள் நுழைய வேண்டிய வாசற்படி யருகிலேயே அவன் நின்றுகொண்டிருந்தான்.

(தொடரும்.) ஆரணி - குப்புசாமி முதலியார்.

ஓர் விளம்பரம்.

வழக்கம்போல் இவ்வருடமும் ஸ்ரீ ரங்கத்தில் ரங்கவிலாஸ மண்டபத்தில் ஏகாதசி திருவிழாவில் நமது ஆனந்தபோதினி புத்தகசாலை திறந்து வைக்கப்படும்.

சந்தாதாரர்களாய்ச் சேர விரும்புவோர் அங்கேயே பணம் கட்டி முன்மாதச்சஞ்சிகைகளைப் பெற்றுக் கொள்வதோடு, நாவல்கள் முதலிய விரும்பிய புத்தகங்களையும் சௌகரியமாய் வாங்கிக் கொள்ளலாகும்.

பத்திராதிபர்.

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்

சித்தார்த்திஞூ தைமீ—சாலிவாகனம் 1841-கலியுகாதி 5020
பசலி 1328-29—கோல்லம் 1094-95 - ஹிஜரி-1338-
இங்கிலீஷ் 1920-ம்ஞூ ஜனவரிமீ—பிப்ரவரிமீ

தைமீ	ஜனவரிமீ	வாரம்	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
1	14	பு	நவ-44-8	சுவா-50-41	சித்த-60	சங்கராந்தி பண்டகை.
2	15	வி	தச-48-50	விசா-56-33	சி-60	மாட்டுப்பொங்கல்
3	16	வெ	ஏ-54-2	அனு-60-0	சி-60	
4	17	ச	து-59-22	அனு-2-55	சி-60	
5	18	ஞா	திர-60-0	கேட்-9-22	ம-9 அ	
6	19	தி	திர-4-29	மூல-15-25	சித்த-60	
7	20	செ	ச-8-46	பூரா-20-45	சித்த-60	
8	21	பு	●-12-15	உத்-25-13	சித்த-60	
9	22	வி	பிர-14-29	திரு-28-31	சித்த-60	
10	23	வெ	து-15-9	அவி-30-35	சித்த-60	
11	24	ச	தி-15-5	சத-31-24	அ-31 ம	
12	25	ஞா	ச-13-31	பூர-31-3	சி-31 அ	
13	26	தி	ப-10-51	உத்-29-39	சித்த-60	சர்வமுகூர்த்தம்
14	27	செ	ஷ-7-15	ரே-27-20	சித்த-60	எள் முதலிய விதைக்க
15	28	பு	அ-54-53	அசு-24-17	ம-25 சி	....
16	29	வி	நவ-52-4	பர-20-43	சித்-21-ம	புது அடுப்புப்போட
17	30	வெ	தச-46-18°	*கிரு-16-47	சி-17 ம	கரிநாள் [க்க
18	31	ச	ஏ-40-31	ரோ-12-44	அ-13 சி	தான்யங்கள் இருப்புவை
19	1 (1920ஞூ பிப்ரவரிமீ)	ஞா	து-34-51	மிரு-8-43	சி-60	விவாஹம், சீமந்தம்
20	2	தி	திர-29-31	திரு-4-53	சி-5 அ	விவாஹம், பும்சவனம்
21	3	செ	ச-24-41	புன-1-31	சி-60	ஆலோசனைசபை கூட
22	4	பு	○-20-24	ஆயி-56-39	சித்த-60	....
23	5	வி	பிர-17-11	மக-55-52	அ-56 சி	கசம் தோண்ட
24	6	வெ	து-15-10	பூர-56-1	சி-60	சாந்திகள்செய்ய
25	7	ச	தி-14-10	உத்-57-23	ம-60	....
26	8	ஞா	ச-14-29	அஸ்-59-55	அ-60	விவாஹம், சீமந்தம்
27	9	தி	ப-16-4	சித்-60-0	சி-60	விவாஹமுகூர்த்தம்
28	10	செ	ஷ-18-55	சித்-3-54	சி-60	மேற்கே பிரயாணம்
29	11	பு	சப்-22-49	சுவா-8-25	சி-60	பும்சவனம்
30	12	வி	அ-27-34	விசா-14-39	சி-60	மாதசங்கிரமணம்

	கே		
	6 து-செ. 4 ம-புத.		குரு
ரவி	21 கு-பு. 10 து-சு.		சனி
பு	சு	ராகு	செ

PRINTED AND PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE "ANANDA BODHINI" PRESS, 15, VENKATESA MAISTRY STREET, MADRAS